# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

21—11—71

★

உள்ளே......


கரம் நீட்டுகிறோம்!
(தலையங்கம்)


அறிக்கை விடுவாரா ஆச்சாரியார்?
(அப்போலோ)

நல்லதல்ல; நல்லதல்ல!
(கட்டுரை)

ஆலயப் பாதுகாப்பா! ஆரியப் பாதுகாப்பா!
(சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி
(தொடர்கதை)


விலை 20 காசு



சேலத்தில் பெரியார் அவர்களுக்கு வெள்ளிச் சிம்மாசனம் பரிசளித்தபோது கலைஞர் அவர்கள் பெரியாருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

# அறிக்கை விடுவாரா ஆச்சாரியார்?

மிஸ்டர் அப்போலோவின் அரசியல் பேட்டி!

மிஸ்டர் அப்போலோ, பத்துத் தடவைகளுக்குமேல், அந்த இதழைப் படித்துப் பார்த்துவிட்டார். அட்டைப் படத்துக்கு விளக்கம் என்பதன் பேரால் அவர்கள் எழுதி இருப்பதுதான் என்ன என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது, எவ்வளவு நாசூக்காக நஞ்சு கலந்துவிட, நாட்டை நாசமாக்கிவிட அவர்கள் எண்ணங் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது அவருக்கு.

முதலில், அந்த இதழின் ஆசிரியக் குழுவைச் சந்தித்துவிடலாம் என்று எண்ணியபோது, அதைவிட, அந்த இதழ் நடத்துபவர்கள், யாரைக் கருவியாய்க் கொள்ள விரும்பியிருக்கிறார்களோ, அவரையே முதலில் சந்தித்து, அவரது கருத்து இந்த விஷயத்தில் எப்படி இருக்கிறது என்பதனை முதலில் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணி, ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு, அந்த புகை மண்டலத்திலேயே மறைந்து புதுடில்லிக்குப் போய்ச் சேர்ந்தார் மிஸ்டர் அப்போலோ. அவ்வாறு மறைந்து செல்லவில்லையானால், அந்த இதழின் ஆதரவளர்கள் என்று கூறப்படுபவர்களின் சாபம் கிடைத்தாலும் கிடைத்துவிடுமே என்று அஞ்சினார்.

புதுடில்லிக்குஅவர் போனபோது பாராளுமன்றத்தில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக சுமார் ஒரு மணி நேரத்துக்குமேல் நிலவிக் கொண்டிருந்தது.

இதைப்போன்ற கூச்சல், குழப்பங்களையெல்லாம் சிண்டிகேட்காங்கிரசுக்காரர்களுக்கிடையே இருந்து அடிக்கடிப் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிருந்ததனால், பாராளுமன்றக் குழப்பம் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை மிஸ்டர் அப்போலாவுக்கு!

நேராக பிரதமர் இந்திரா காந்தியின் முன்பு போய்நின்று, ஒரு நிமிடம் இப்படித் தனியாக வருகிறீர்களா? என்று பணிவோடு கேட்டார்.

தலை நிமிர்ந்து பார்த்து, புன்முறுவல் பூத்துக்கொண்டே, பிரதமர், "இந்த நேரத்திலா நீங்கள்?" என்றார்.

"என் வருகைக்கு நேரமாவது? காலமாவது? நினைத்தால் நினைத்தபடிதானே! சர்வசக்தியும் படைத்த சர்வேசுவரன் இப்போது நான் தானே;" என்றார் அப்போலோ!

பிரதமர் பதில் பேசாமல் அப்போலோவைத் தொடர்ந்தார். அப்போலோ, பிரதமரின் தனியறைக்குள் வந்து நுழைந்தார். இந்திரா, தன் இருக்கையிலமர்ந்து கொண்டார். எவ்வளவோ வற்புறுத்தியும் அப்போலோ உட்கார மறுத்துவிட்டார்.

"ஹலோ மேடம்! எங்கள் தமிழ் நாட்டிலிருந்து, உங்களுக்கு, ஒரு அன்பழைப்பு விட்டிருக்கிறார்களே! அழைப்புக் கிடைத்ததா?" என்றார் அப்போலோ!

அழைப்பா? எனக்கா? தமிழ் நாட்டிலிருந்தா! உங்கள் நாட்டு முதலமைச்சர்தான் இப்போது வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறாரே!—என்றார் பிரதமர், எதுவுமே புரியாதவராக!

"சரி, சரி! அது இருக்கட்டும் மேடம்! முதலில் என் இதயங் கனிந்த வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!" என்று ஏதோ நினைவு வந்தவராக வார்த்தைகளைக் கொட்டினார் அப்போலே.

"என்ன—தவளைப் பாய்ச்சலாக இருக்கிறதே உங்கள் பேச்சு!"

"ஒன்றை விட்டு ஒன்று பேசுவதற்குத்தான் தவளைப் பாய்ச்சல் என்று தமிழிலக்கணம் கூறும்; உங்களுக்குக் கூட தமிழிலக்கணம் தெரியுமா மேடம்?"

"எனக்கு இலக்கணங்களைப்பற்றியெல்லாம் கவலை இல்லை. முக்கியம் இலட்சியம்தான்; அதனை அடைய நான் எந்தமுறைகளையும் கையாள்வேன்! எந்தச் சட்டத்தையும் கொண்டுவருவேன்"

"இருங்கள் மேடம்! நீங்கள் எங்கேயோ போகிறீர்களே? உங்களுக்கு இந்தக்கிழமை 19-ஆம் நாள் 55-ஆவது பிறந்த தினம் அல்லவா! அதற்குத்தான் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டேன்"

"ஓகோ! அது எனக்கு மறந்தே போய்விடுகிறது! நான்தான் யாரும் என் பிறந்த நாளுக்கு விழாவெடுக்கக் கூடாது என்று கூறிவிட்டேனே!"

"நீங்கள் கூறிவிட்டால்? எங்கள் நாட்டில் "கல்கி" என்று ஒரு தமிழ் ஏடு-தமிழ் ஏடுதான்—சமஸ்கிருத ஏடோ என்று நினைத்துவிடாதீர்கள்! தமிழில் எழுதிக் கடை நடத்தும் ஒரு தமிழ் ஏடுதான்—உங்கள் பிறந்தநாளைப்பற்றி எழுதி இருந்தது! படித்துப் பார்த்தபோது எனக்குச் சில சந்தேகங்கள் வந்துவிட்டன! அது தொடர்பாகத்தான் தங்களைச் சந்திக்கவந்தேன்!"

"அப்படியா! 'கல்கி' ஏடு என்றால் என் தந்தைக்கு ரொம்பவும் பிடிக்குமே!!

"ஒரு சந்தேகம்! கல்கியையா? அல்லது அதன் பாகஸ்தரான சதாசிவம் என்பவரின் குடும்பத்தையா?"

"நீங்கள் எம். எஸ். எஸ். - ஐச் சொல்கிறீர்களா? எம். எஸ். எஸ். மீது என் தந்தைக்கு ஒரு தனிப் பற்று. அவரது இசையின்மீது என் தந்தை அபாரமான மதிப்பு வைத்திருந்தார்?"

"அதுதான் ஆவடியில், அந்தக் காலத்தில் நடந்த மாநாட்டின் போதே தெரிந்துவிட்டதே! நான் சொல்ல வந்தது அது அல்ல — ஆனாலும் அன்றிருந்த அந்த பந்தத்தையும் பாசத்தையும் வைத்துதான் இன்று இப்படி அன்பழைப்புக் கொடுத்திருக்கிறதோ என்றுகூட இப்போது எனக்குத் தோன்றுகிறது..."

"விஷயத்தைச் சொல்லாமல் பேசிக்கொண்டே இருந்தால் எனக்குக் கோபம் வந்துவிடும்!"

"வேண்டாம், வேண்டாம், கோபித்துக்கொண்டுவிடாதீர்கள்! நீங்கள் பிரதமர் பதவிக்குத் தகுதியற்றவர் அல்லர் என்றும் தெரிவித்திருக்கிறது தெரியுமா?"

"என்ன, என்ன! ராஜாஜியின் கல்கியா அப்படி எழுதி இருக்கிறது?"

"சத்தியமாக அப்படித்தான்! கல்கிதான்!! எழுதி இருக்கிறது, தேச பக்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் நீங்கள் என்றும், அதனால் பிரதமராக இருக்கத்தக்கவர்தான் என்றும் கூறிவிட்டு, உடனே

(4-ஆம் பக்கம் பார்க்க)



காஞ்சி

நிறுவனர்: அண்ணுதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 21—11—71 | இதழ் 19

# கரம் நீட்டுகிருேம்!

அன்புத் தோழர்களே!

சென்ற செப்டம்பர் திங்கள் 12-ஆம் நாள் 'காஞ்சியின் வேண்டுகோள்' என்ற எனது தலையங்கத்தைக் கண்டு, நூற்றுக்கணக்கானோர் ஆண்டு சந்தாவும், ஆறு மாத சந்தாவும் என அனுப்பிவைத்திருக்கிறீர்கள். அதன் மூலம் இன்னமும் 'காஞ்சி' இதழ், கழகத் தோழர்களது கவனத்திலிருந்து முழுமையாக மறக்கப்பட்டு விடவில்லை என்பதையும், 'காஞ்சி'யை மறவாததன் வாயிலாக பேரறிஞர் அண்ணு அவர்களை மறந்துவிடவில்லை என்பதையும் தெளிவாகக் காட்டியிருக்கிறீர்கள்.

'காஞ்சி' இதழின் பீடு பற்றியும், பெருமை பற்றியும் கழகத் தோழர்களாகிய உங்களுக்கு அடிக்கடி நினைவுறுத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஏனென்றுல், இன்றைய கழக ஆட்சிக்குக் கால்கோலிக் கொடுக்க முக்கிய ஆயுதமாகக் 'காஞ்சி' இருந்துவந்த தென்பதை நீங்கள் அறிவீர்கள்.

கலைஞர் கருணுநிதி அவர்கள் தலைமையில் இன்றைக்குக் கழக ஆட்சி, வலிவோடும் பொலிவோடும் நாட்டு மக்களுக்கு நல்லபடி திட்டங்களைத் தீட்டி, நல்வாழ்வு நல்குவதற்கான நற்றெண்டில் ஈடுபட்டிருக்கிறது என்ற பெருமிதத்தோடு செம்மாந்து நின்று இரு வண்ணக் கொடியை ஏற்றிட்டுப் பார்க்கும் அதே நேரத்தில், இதயத்தின் எந்த ஒரு மூலையிலாவது 'காஞ்சி' இதழைப் பற்றிய எண்ணமும் தோற்றிக் கொண்டிருக்கத்தான் வேண்டும் என்றுல், அது எந்த வகையிலும் மிகையானதாக இராது என்றே நான் இதயபூர்வமாக நம்புகிறேன்.

நாட்டுக்கு நல்கிவிட வேண்டுமென்று பேரறிஞர் அண்ணு அவர்கள், எந்தக் கருத்தையெல்லாம் வடித்து வைத்தாரோ, அந்தக் கருத்துக்களையெல்லாம் ஏந்திவந்த காரணத்தால் மட்டுமல்ல; பேரறிஞர் அண்ணுவே தோற்றுவித்தார் என்ற காரணத்தாலும்கூட "காஞ்சி" கழகத்தின் உருவாகிக் கொண்டிருக்கும் வைரம் பாய்ந்த வரலாற்றில் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும்!

அத்தகைய சிறப்பிடத்தைப் பெற்றிருந்த 'காஞ்சி', பேரறிஞர் அண்ணு அவர்களது மறைவுக்குப் பிறகு எந்த இடத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது? என்பதை எண்ணிப் பார்க்காமலிருக்க முடியவில்லை!

நாங்கள் தொய்ந்து துவண்டுவிட்ட நேரத்திலும்கூட 'காஞ்சி' தொய்ந்துபோக விடக்கூடாது என்பதற்காக நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளின் பளு குறைவானதல்ல என்பதனை, இதற்கு முன்பு நான் கழகத் தோழர்களது கவனத்துக்கு எடுத்து வைத்திருக்கிறேன்.

அமரர் அறிஞர் அண்ணு அவர்களது பெயர் இந்த நாட்டில் எந்தக் காலம் வரையில் நினைவுகூரப் படுகிறதோ, அந்தக் காலம் வரையிலாவது 'காஞ்சி' இதழும், அறிஞர் அண்ணுவின் அடியொற்றி, தன் முத்திரையைப் பதித்துக்கொண்டு உயிர் வாழ வேண்டும்; வாழவைத்து விடவேண்டும் என்ற எங்களது குறிக்கோள் சாமானியமானதல்ல; உங்கள் அனைவரது ஒத்துழைப்புமின்றி நிறைவேறக் கூடியதுமல்ல!

கழகத் தோழர்களது நல்லாதரவு என்றும் எங்களுக்குக் கிடைக்கும் என்ற நல்ல நம்பிக்கையில்தான் 'காஞ்சி'யைக் காக்கும் அந்தப் பெரும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிருேம் என்று கூறுவதற்கு நாங்கள் தயங்கத் தேவையில்லை என்றே நினைக்கிருேம்!

'காஞ்சி' இதழ் காக்கப்பட வேண்டியதுதான் என்று நீங்கள் நம்புவீர்களானுல், 'காஞ்சி' இதழைக் காப்பதன்மூலம், அறிஞர் அண்ணு அவர்களது குடும்பமும் காப்பாற்றப்படத்தான் வேண்டும் என்று நீங்கள் நம்புவீர்களானுல், இப்போதை விடவும், இன்னும் பல ஆயிரம் தோழர்களது நல்லாதரவு உடனடியாகக் 'காஞ்சி'க்குத் தேவைப்படுகிறது.

அறிஞர் அண்ணு அவர்களின்பால், நல்லெண்ணம் கொண்ட உண்மையான கழகத் தோழர்கள் சில ஆயிரம் பேர்கூடத் தமிழ்நாட்டிலில்லாமலில்லை என்று இன்னமும் எங்கள் நெஞ்சு, நீதி புகட்டிக் கொண்டிருக்கிறது.

'காஞ்சி' இதழினைக் காக்கும் சூள் எடுத்துக் கொண்டு செயல்படும் போதிலேயே, சந்திக்கவேண்டியிருக்கும் சங்கடங்களையெல்லாம் ஏட்டிலே எழுதிக் காட்டிக்கொண்டிருக்க முடியாது.

உலகத்தின் தொல்லைகள் அனைத்துக்கும் ஒரு மொத்த வடிவம் கொடுக்கப்பட்டால்கூட, அது இன்றைய 'காஞ்சி' இதழின் தொல்லைகளுக்கு ஈடுதர முடிந்ததாக இருக்கும் என்று எங்களால் ஒப்ப முடியவில்லை. அகத் தொல்லைகள் இப்படி இருக்க, புறத் தொல்லைகள் வேறு!

அச்சுத் தொழிலில்—அதுவும் இதழ் ஒன்றேடு இணைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் அச்சுத் தொழிலில் இன்று சந்திக்க வேண்டியிருக்கும் சங்கடங்கள் பலப்பல.

காகிதங்கள், முன்னைப்போதையும்விட பல மடங்கு விலையேறி இருக்கிறது. மையின் விலையும் அப்படித்தான்! ஊழியர்களுக்குத் தரப்படவேண்டியிருக்கும் ஊதியமும்கூட அதுபோலவேதான்!

இவை அனைத்தையும் மனதிலிருத்திக்கொண்டுதான், 'காஞ்சி' இதழின் விலையை, அடுத்த 28—11—71 முதல் இருபத்தைந்து காசுகளாக உயர்த்தி இருக்கிருேம்.

கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளில், தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எல்லா ஏடுகளுமே, தனது விலையில், மூன்று நான்கு முறை மாறுதலேற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதனையும், அப்போதெல்லாம் 'காஞ்சி' விலை கூட்டுவதைப் பற்றி எண்ணிக்கூட பார்த்ததில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் சொல்லிக் கொள்ளத்தான் வேண்டும்.

அறிஞர் அண்ணு அவர்களால் தோற்றுவிக்கப் பெற்ற இந்த ஏடு, எந்த வகையிலும் குன்றிய தரம் கொண்டதாய் இருந்திடக் கூடாது என்பதிலே

பெரும் அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறோம்.

எங்களால் இயன்ற மட்டும், வாசகர்களது விருப்பங்களை நிறைவேற்றி வந்திருக்கிறோம். மாற்றம் தேவையெனக் கோருபவர்களும் இருக்கிறார்கள்.

எத்தகைய மாற்றங்கள் தேவை? இன்னும் என்னென்ன பகுதிகள் இணைக்கப்படலாம்? எப்படிப்பட்ட கருத்துக்கள் உங்களுக்குத் தேவை? என்பன பற்றிய உங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்.

இவை அனைத்தும் 'காஞ்சி'யின் நெடுந்தூரப் பயணத்துக்குப் பயன்படும். அதே நேரத்தில் உங்கள் பரவலான ஆதரவுக்கும் வழிகோலும்.

கரம் நீட்டுகிறோம், கனிந்த ஆதரவுக்கு! காப்பாற்ற வேண்டியது கழகத் தோழர்களது கடமை!

அன்புள்ள,

**சி. என். ஏ. இளங்கோவன்.**

## ஒரு முக்கிய அறிவிப்பு

நாட்டின் பொதுச் சூழ்நிலையையொட்டி, பத்திரிகை தொழிலின் பளுவும் கூடுதலாகி இருக்கின்ற நிலையினை நமது வாசகர்கள் நன்கறிவார்கள்.

காகித விலையும், அச்சுத் தொழில்நிலையும் நம்மை நிர்ப்பந்திக்கின்றன.

**எனவே, 'காஞ்சி' கிழமை இதழின் விலையும் அடுத்த 28-11-71 முதல் ஐந்து காசுகள் உயர்த்தப்பட்டு, 25 காசுகளாக வழங்கப்படும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.**

நிர்வாகி : 'காஞ்சி'
காஞ்சிபுரம்-3.

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் தந்தையின் தலையில் ஒரு பலமான குட்டுப் போட்டிருக்கிறது அந்த ஏடு. அதாவது. நேரு பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்த பிறகு அவர் கைகொண்டிருந்த சோஷலிச இலட்சியங்களால் நாடு சுடுகாடாகிக் கொண்டே வந்து விட்டதாம்! நல்லகாலமாக இராஜாஜியின் "சுதந்திராக் கொள்கைகள்" நாட்டைக் காத்தனவாம்!"

இதைக்கேட்டு பிரதமர் இந்திரா காந்திக்குச் சிரிப்பு வந்துவிட்டது! 1971 மார்ச் மாதத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலையும், அதற்கு முன்பு நாடாளுமன்றத்தில் சுதந்திராக் கட்சிக்கு இருந்த இடத்தையும் 1971-க்குப் பிறகு இருக்கின்ற இடத்தையும் ஒரு கணம் எண்ணிப் பார்த்தார். மீண்டும் சிரித்துக்கொண்டே "அப்புறம்?" என்றார்.

"உங்கள் தந்தையாரின் செல்வாக்குச் சீரழிந்ததற்குச் சோஷலிசக் கொள்கைகளே காரணமாக இருந்தது போல, நீங்களும் நேருவைவிட அதிகமான பற்றும், ஈடுபாடும், முயற்சிகளும் சோஷலிசத் தத்துவத்தைச் செயல்படுத்துவதில் அக்கறையும் கொண்டிருப்பதால், நாடு கெட்டுக் குட்டிச்சுவராகிவிடும்!" என்ற கருத்தை வேறுவிதமான வார்த்தைகளில் எழுதி இருக்கிறது" என்று கூறி அப்போலோவும் சிரித்துக் கொண்டார்!

"ஏதோ அழைப்பு, கிழைப்பு என்றீர்களே!"

"முக்கியமான அதை விட்டு விட்டேனே! நீங்கள் இப்போதை விட இன்னும் அதிகம் புகழ் பெறவும், அதிகத் திறமையாகச் செயல்படவும், சரித்திரத்தில் உங்கள் பெயரைச் செம்மையாகச் செதுக்கி வைத்துக் கொள்ளவும், இந்தத் துணைக் கண்டத்துக்கு உருப்படியான சில நன்மைகளையாவது செய்வதற்காகவும், கட்சிச் சார்பற்றவராக நீங்கள் மாறி, சுதந்திராக்கட்சிக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுவிட வேண்டுமாம்! அதாவது கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட—ஆனால் அரசியல் முனிவராக இருந்து கொண்டிருக்கும் இராஜாஜி காட்டும் அறிவுப் பாதையில் நடக்க வந்துவிட வேண்டுமாம்!"

பிரதமர் இந்திராவுக்கு மீண்டும் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்துக் கொண்டே, "அதெப்படி முடியும்! கட்சிகளுக்கப்பாற்பட்டவர் — ஒரு அரசியல் முனிவராக இருக்க முடியுமோ! இதென்ன பித்தலாட்டமாக இருக்கிறதே!" என்றார்.

"கல்கி எழுதி இருக்கிறதே இப்படி!"

"போய், அதை எழுதியவரையே கேட்டு வாருங்கள்! அத்துடன், நான் ஆரியத்துக்கு என்றும் அடிபணிய மாட்டேன் என்றும்; என் அறிவுக்கும் சிந்தனைக்கும் எது சரியென்று படுகிறதோ, அதனைத்தான் செய்வேன் என்றும் கூறியதாக எடுத்துக்காட்டுங்கள்!"

—என்று கூறிக்கொண்டே நாடாளுமன்ற அவையுள் நுழைந்தார். அப்போலோ பறந்து வந்து கீழ்ப்பாக்கம் தோட்டத்தில் குதித்துச் சுற்றிப் பார்த்தார்! ஆசிரியர் குழாமிருக்குமிடம் வந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டு, இந்திரா எழுப்பிய ஐயத்தைக் கேட்டார்.

ஆசிரியர் குழுவிலிருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மிஸ்டர் அப்போலோ, "கட்சிகளுக் கெல்லாம் அப்பாற்பட்டு என்று எழுதியதுடன் நிறுத்திக் கொண்டிருக்கலாமே, 'அரசியல் முனிவர்' என்ற சொல்லிலேயே கட்சி வாடை கலந்துவிடுமே!" என்றார்.

ஆசிரியர் குழுவிலிருந்த ஒருவருக்குத் தெளிவு பிறந்துவிட்டது. "ஏன் முடியாது? எந்தக் கட்சியையும் சாராமல் அரசியல் கருத்துக்களை ஒருவர் எடுத்துரைக்க முடியாதா?" என்றார்.

"முடியும் ஐயா! முடியும்! ஆனால் நீங்கள் இராஜாஜியைச் சொல்லி இருக்கிறீர்களே! அவர் கட்சிச் சார்பற்ற அரசியல் வாதி அல்லவே! அவருக்கென்று ஒரு கட்சி இருக்கிறதே! அந்தக் கட்சியின் கருத்துக்களுக்காக உங்கள் கல்கியும், சுயராஜ்யாவும் இருந்து கொண்டிருக்கின்றனவே!" — என்றார் அப்போலோ!

மீண்டும் அங்கே ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. அப்போலோ சொன்னார் "முதலில் சுதந்திராக் கட்சியைக் கலைத்துவிட்டு, அதன் ஸ்தாபகர் இராஜாஜி என்ற கௌரவத்தைத் துறந்து விட்டதாக ஒரு அறிக்கை விடச் சொல்லுங்கள்...அதன் பிறகு உங்கள் யோசனைகளைப் பற்றி..."—என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டு விட்டார்?

—திருவாரூர் முத்துராமன்.

# சோழமாதேவி

ராஜிமணாளன்



[32]

## சோகக் கடலில் ரோகணரடா!

அனுராதபுரம் அரண்மனையிலிருந்து வந்து, மகா காமா அரண்மனையிலும், ரோகணரடாவின் பல பகுதிகளிலும் சுற்றிச் செய்தி சேகரித்துக்கொண் டிருக்கிறான் வேட்டரையன் எனும் ஒற்றன் என்ற செய்தி எப்படியோ நந்திமித்திரனுக்குத் தெரிந்து விட்டது.

ஆப்கனிஸ்தானத்திலிருந்து திரும்பி, ஒய்வெடுப் பதாகக் கூறித் திரும்பியவனுக்குக் கிடைத்த முதல் செய்தியே அதுதான்! தனக்குக் கிடைத்த அந்தச் செய்தி, விகாரதேவிக்கோ, கமணனுக்கோ தெரிந்து விடக்கூடாது என்று எண்ணினான். எனவே, தனக்குத் தகவல் தந்த ஒரு பணியாளை, உடனடியாக அவன் ஒற்றுப் பணிக்காக அனுராதபுரம் செல்லவேண்டும் என்று கூறி, அவனை அனுப்பி வைத்துவிட்டு, தன் கண்களை, கழுகுக் கண்களாக்கிக்கொண்டு விட்டான்!

அவனது நம்பிக்கைக்குரிய பலரையும் சந்தித்து வேட்டரையனைப் பற்றிய விளக்கங்கள் தந்து, சந்தே கத்துக்குரிய நிலையில் அத்தகையவன் எவனைச் சந்தித் தாலும் தலையைத் துண்டாடிவிடும்படிக் கூறினான். அத்துடன் அமைதி பெறவில்லை, அவனது மனம்!

மனத் தடத்தில் ஒருவித அரிப்பு ஏற்பட்டுவிட் டது அவனுக்கு. தானே சென்று அவனைத் தேடிப் பிடித்து, அவன் தலையைத் துண்டாடி துண்டிக்கப் பட்ட அந்தத் தலையை, அனுராதபுரம் அரண்மனைக் குத் தனது பரிசாக அனுப்பி வைக்கவேண்டும் என்று விரும்பினான்!

ஒற்றுப் பணியில் ஈடுபட்டிருப்போர், எந்தெந்த இடங்களில் தங்கி இருக்கும் வாய்ப்புண்டு என்பது பற்றி எண்ணிப்பார்க்கத் தொடங்கினான்.

இந்த எண்ணத்துடனேயே, அவனது ஓய்வுவிடுதி யிலிருந்து, வெளியே வந்து, சற்றுத் தூரத்திலிருந்த ஒரு செயற்கை அருவியின் அருகே வந்து நின்று, அருவியையே சிறிதுநேரம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

விழிகள் அருவியின் வீழ்ச்சியின்மீது பதிந்திருந் தாலும், எண்ணம், வேட்டரையனைப்பற்றியே வட்ட மிட்டுக்கொண்டிருந்தது.

வேட்டரையன் ஒருவன் மட்டும்தான் இங்கே இருக்கிறானா? அல்லது பலபேர் இருந்துகொண்டிருக் கிறார்களா? என்று ஒரு முறை அவன் எண்ணிப் பார்த்தபோது, அவனையறியாமலேயே ஒரு வகை திகைப்பு அவனைப் பற்றிக்கொண்டு விட்டது.

நந்திமித்திரன் என்ற ஒரு சிங்கம்கூட மனம் திடுக்கிடுமா என்ன? அதிசயிக்கத் தக்க ஒன்றுதான்! ஆனாலும் நந்திமித்திரன் இப்போது திடுக்கிட்டுத் தான் போனான்! திகைத்துத்தான் விட்டான்!

அந்தத் திகைப்பு, நந்திரமித்திரனது உள்ளத்தில் பலவித துணை எண்ணங்களைத் தோற்றுவித்துவிட்டது என்றாலும் அவை தோன்றி மறைந்தன என்றே கூற வேண்டும். ஆனால் மறையாமல் நின்றுகொண்டிருந் தது ஒரே ஒரு எண்ணம்! தம்பளை குகைக் கோயிலைப் பற்றிய எண்ணம்! அங்கே சேமித்து வைக்கப்பட் டிருந்த போர்க் கருவிகளைப்பற்றிய எண்ணம்!

இந்த எண்ணம் தோன்றியவுடன், வேட்டரை யனைக் கண்டுபிடிப்பதா? அல்லது முதலில் போர்க் கருவிகளைப் பற்றி மதிப்பீடு செய்வதா என்ற ஐயம் பற்றிக்கொண்டு விட்டது.

விஜிதபுரம் எல்லைக் கிராமத்திலிருக்கும் தனது உயிர் நண்பன் மேற்பார்வையில் தயாராகிக்கொண் டிருக்கும் போராயுதங்கள், போதுமானவையாக இருக்கக்கூடும்.

சிங்கத்தின் குகைக்குள்ளேயே, அதனைப் பிடித்து அடைக்கப் போகும் கூண்டுதான் தம்பளை குகை! நண்பன், நல்லபடிதான் செயல்பட்டுக் கொண்டிருப் பான்! என்றாலும், அந்தப் படைக் கருவிகளை, தன் விழிகள் சோர்ந்துபோகும் அளவுக்குக் கண்டுகளிக்க வேண்டும் என்று ஆசை பற்றிக்கொள்ளவே, வேட் டரையனைப்பற்றிய அரிப்பு மனம் மாறி, இனம்சுட்டி விளக்கமுடியாத ஒருவகை பரபரப்பு ஏற்பட்டு விட்டது.

"அதுதான் சரி! முதலில் தம்பளைக்குப் போய் வருவோம்! அதற்குள் இங்குள்ள எனது நம்பிக்கைக் குரியோர், அவனைப் பிடித்துவிடக் கூடும்; பிடிக்க வில்லையானால் தானே திரும்பி வந்து தேடலாம்!" என்று எண்ணிக்கொண்டு, திரும்பினான்.

மெள்ள இருள் வந்து கவிந்து கொண்டிருந்தது. என்றாலும், இறுதிநேரத்தில் தன் முழுச் சக்தியையும் காட்டி தாக்கிவிடுவது என்று போர்வீரன் முயன்று பார்ப்பதுபோல, இறந்துகொண்டிருந்த பகலவன், செங்கதிர்களைப் பரப்பி இருளைத் துரத்த முயன்று தோற்றுக்கொண்டிருந்தான்!

தலையை நிமிர்த்தி, கதிரவன் மறையும் அந்தக் காட்சியையும், வான மண்டலத்தின் மேற்றிசை யையே செம்மை படரச் செய்திருக்கும் கோலத்தை யும் ஒருமுறை கண்டான்! அந்தக் காட்சிகூட, இன் னும் சில நாட்களுக்குள் தமிழர் ஆட்சி என்ற கதிரவன், சிங்களர் ஆட்சி என்ற நிலவினால், தோற கடிக்கப்படப் போவதாகவும், அதுபோது நாடு

இரத்தமயமாகப் போவதாகவும்தான் அவனுக்குத் தெரிந்தது.

திரும்பி, நின்ற இடத்திலிருந்து இரண்டுஅடிகள் கூட அவன் எடுத்து வைத்திருக்கமாட்டான். அங்கே சலசலத்து ஓடிக்கொண்டிருந்த அந்த செயற்கை அருவியின் பக்கத்திலே பிரமாண்டமாக வளர்த்து விடப்பட்டிருந்த தாழைமரங்கள், காற்றின் அலைப் புக்கு ஆட்பட்டு, சரசரத்தன.

நின்று, அந்தப் புதரின் பக்கம் திரும்பிப் பார்த் தான் நந்திமித்திரன். தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. கருப்பு உடைகளைப் போர்த்திக்கொண்டு, புதரின் இடுக்கில் இருந்து யாரோ ஓடுவதைக் கண் டான். சிந்தித்துக் கொண்டிருக்க நேரமில்லை. ஓடத் தொடங்கினுன், கருப்புடையால்போர்த்துக்கொண்டு முன்னே ஓடிக்கொண்டிருப்பவனை. நந்திமித்திரன், ஓடிக்கொண் டிருக்கும்போதே, சில காலத்துக்கு முன்பு, தானும் அதுபோல், தளபதி தியாகராயரிட மிருந்து தப்பி ஓடிக்கொண்டிருந்த காட்சி உருவாகி விட்டது அவனது மனத்திரையில்! எவ்வளவோ முயன்றும் அதனைத் தடுத்துக்கொள்ள முடியவில்லை அவனுல்!

மனத்துடன் போராடிக்கொண்டே, ஓடினுன் தொடர்ந்து. கரிய உருவம் சற்றுத் தொலைவில்தான் ஓடிக்கொண்டிருந்தது.

ஓடிக்கொண்டிருந்த நந்திமித்திரன், இமை நொடி நேரத்துக்குள்ளாக இடறிக் கீழே விழுந்தான். ஒழுங்கற்றிருந்த பாதையில், சிதறிக் கிடந்த பாறை களின்மீது அவன் தலை மோதியது!

---




என்ன நடந்தது என்பது அவனுக்கே தெரிய வில்லை! நிதானத்துக்கு வந்து, கண்விழித்துப் பார்க் கும்போது, எங்கும் இருட் போர்வை கவிந்துகொண் டிருந்தது.

எழுந்து ஒரு பாறையின்மீது அமர்ந்துகொண்டு, சுற்றிலும் ஒருமுறை பார்வையைச் செலுத்திவிட்டு, தலையில் கைவைத்துப் பார்த்தான் நந்திமித்திரன்.

நெற்றிப் பொட்டுக்கு மேலே சற்றுத் தள்ளி வலி இருப்பதை உணர்ந்தான். வலித்த இடத்தில் கைவைத்தான்; இரத்தம் கசிந்து உறைந்துபோயிருப் பதை உணர முடிந்தது.

என்றுலும், அந்தக் கரிய உருவத்தைப் பற்றி மீண்டும் அவன் எண்ணிக்கொண்டபோது, ரோகண ரடாவின்மீதே ஏதோ ஒரு கருமை படர்ந்து விட்டது போன்ற உணர்வு எழுந்து அடங்கியது.

யாராக இருக்கும் அது? ஒருவேளை, ஒற்றறிய அலைந்துகொண்டிருக்கும் வேட்டரையன் தானே? அடடா! நல்லதொரு வாய்ப்பை, நழுவவிட்டு விட்டேனே! என்ன துரதிருஷ்டம்! இப்படி எண்ணிக் கொண்டான். நான் முழு ஓய்வு எடுத்துக்கொண் டிருக்க வேண்டும்! அதன் பிறகே இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று நினைந்து பார்த்தபொழுது, அது நியாயம்தான் என்று பட்டது அவனுக்கு. அந்த நினைவு வந்தவுடனேயே, உடம்பு அதிகமாக வலி எடுக்கத் தொடங்கிவிட்டது.

இரும்பு இதயம் படைத்தவர்களால் மட்டுமே எத்தகைய கொடுமைகளையும் பாறைபோல இருந்து தாங்கிக்கொள்ள முடியும் என்பார்கள். உடல் பலவீனமாக இருந்தாலும், இதயம் மட்டும் இரும் பாக இருந்துவிடுமானுல், எந்த ஒன்றையும் அந்த இதயத்தால் தாங்கிக்கொள்ள முடியும்! எல்லோ ருமே நந்திமித்திரனுக இருந்துவிட முடியுமா? பாறை யில் மண்டை மோதி இருக்கிறது! இரத்தம் கசிந் திருக்கிறது. சர்வ சாதாரணமாக எழுந்து நடக்கத் தொடங்கிவிட்டானே அவன்!

உடம்பில் வலி இருந்தாலும், இதயம் பலவீன மாக இருந்தாலும் அதனைக் கொஞ்சங்கூட வெளிக் குக் காட்டிக்கொள்ளாமல் நடந்து, மீண்டும் தனது ஓய்வு விடுதிக்கு வந்து சேர்ந்தான்!

மஞ்சத்தில் சென்று படுக்கப் போனவனது தலை யில் ஒரு பேரிடியே விழுந்தது! அந்த இடிபோன்ற செய்தியை அவனுல் நம்பவே முடியவில்லை! நம்பாம லும் இருக்க முடியவில்லை.

* * *

கமணன், பணியாள் ஒருவனிடம், பெண்ணின் ஆடைகளைக் கொடுத்து, மன்னர் காகவன தீசரிடம் சேர்ப்பித்து, அதனை அணிந்து கொண்டுவந்து தன்னைச் சந்திக்கும்படிச் சொல்லியனுப்பிய செய்தி, மன்னரை எட்டு முன், விகாரதேவி அளித்த புதிய உத்தரவு முதலமைச்சர் காசியர் மூலம் மன்னருக்குக் கிடைத்துவிட்டது. நடைபெறப் போகும் போர்க் காரணமாக இனி வகுக்கப்படும் திட்டங்கள் அனைத் தும் மன்னர் காகவனதீசர் மூலமே வகுக்கப்பட வேண்டும்–நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உத்திரவு கிடைத்துவிட்டது மன்னருக்கு.

சூழ்ந்த குழப்பங்களாலும், எண்ணங்களின் அலைக்கழிப்பாலும், முதுமையின் ஆட்சியாலும் தளர்ந்து தள்ளாடி மஞ்சத்தில் சாய்ந்து, விழுந்து, உருண்டு, மீண்டும் எழுந்து அமர்ந்த மன்னரை,

காசியபர் கொண்டுவந்து கொடுத்த உத்திரவு, நிமிர்ந்து நிற்கச் செய்துவிட்டது மட்டுமல்ல புதிய வலிவினையும் கொண்டு வ ந் து சேர்த்துவிட்டது. விகாரதேவி, மீண்டும் ஆட்சிப் பொறுப்பை, தன்னிடம் கொடுத்துவிடுவாள் என்று எண்ணிக் கூடப் பார்க்கமுடியாத நேரத்தில்—அது நடந்தே விட்டது என்றால், மன்னர் என்ன, வேறு எவரால்தான் வியப் படையாமல் இருக்க முடியும்?

நிகழ்ந்திருக்கும் அந்த அதிசயம் பற்றிய மகிழ்வில் மூழ்கிக்கொண்டிருந்த அந்த நேரத்தில்தான் அது நடந்துவிட்டது! அது நடந்தது முதலமைச்சர் முன்னிலையிலேயே என்றால், மன்னர் உயிரை வைத்துக் கொண்டிருக்கலாமா?

மன்னரின் கண்கள் கனன்று விட்டன! பெண்ணுடைகளை ஏந்தி வந்தவனே முதல் பலியாகிவிட்டான் முதலமைச்சரின் உத்திரவால்! மன்னர் எதையுமே சிந்திக்கவில்லை. "கைது செய்யுங்கள் அந்த துஷ்ட கமணனை! இரும்புக் கம்பிகளால் பிணைத்து, என் எதிரே கொண்டுவந்து நிறுத்துங்கள்" என்று கர்ஜித்துவிட்டார் மன்னர்.

எதிர்பாராத இந்த உத்திரவால், முதலமைச்சர் காசியபர் நிலைகுலைந்து போனார். முழு அதிகாரங்களும் கொடுக்கப்பட்டு விட்ட பின்னர், இனி அவரால் அந்த உத்திரவை அலட்சியம் செய்ய முடியாது. நேற்றுவரை, இதுபோன்ற உத்திரவுகளை உகுத்துக் கொண்டிருந்தவரை, இன்று வேறொருவரின் உத்திரவால் கைது செய்வது என்றால், இது அரசியலில் ஒரு நெருக்கடியான கட்டம்தானே!

காசியபர் கைதட்டிப் பணியாளை அழைத்தார்! "உடனே துணைத் தளபதி சூரநிமிலனை இங்கே வரச் சொல்!" என்று கட்டளை உதிர்த்தார்.

"பாருங்கள் அமைச்சரே! இந்தக் கமணன் என்னை எத்தனையோ முறை இழிவுபடுத்தி இருக்கிறான். என்றாலும் பொறுத்துக் கொண்டிருந்திருக்கிறேன்—ஒரு துஷ்டனை மகனாகப் பெற்றுவிட்டோமே என்பதற்காக! என்ன துணிவிருந்தால், அவன் பெண்ணுடைகளை எனக்கு அனுப்பி இருப்பான்! நான் அவற்றை அணிந்துகொண்டு போய் அந்த நாயைச் சந்திக்க வேண்டுமாமே!" என்று கூறி தன் இதயத்தை விண்டுக் காட்டினார்.

சிறிதுநேரத்தில் சூரநிமிலன் அங்கு வந்து சேர்ந்தான். மன்னரது கட்டளையை அவனிடம் செய்தியாகச் சொல்லப்பட்டது. சூரநிமிலன் அவ்விடம் விட்டு வேகமாகப் பறந்தான். முதலமைச்சரும் புறப்பட்டார் அங்கிருந்து.

வெகுநேரத்துக்குப் பிறகு, அவன் திரும்பிவந்து காசியபரிடம், "இளவரசர் தப்பிவிட்டார் அமைச்சர் அவர்களே! நான் அவரது இருக்கையைச் சேரும் முன்பே, அவர் ஓடிப் போய்விட்டாராம்" என்றான்.

காசியபருக்கு ஒரு வகையில், மனநிம்மதிதான் என்றாலும், மன்னரது உத்திரவைச் செயல்படுத்த முடியவில்லையே என்ற வருத்தமும் ஒரு பக்கம் இருக்கத்தான் செய்தது. கமணன் தப்பி ஓடிவிட்ட செய்தியை மன்னரிடம் தெரிவித்து வரப் புறப்பட்டார் முதலமைச்சர். விடை பெற்றுத் திரும்பினான் சூரநிமிலன். "நல்ல வேளை; இளவரசரைக் கைது செய்யும் உத்திரவு என்னிடமே தரப்பட்டது; இல்லையானால் அவர் இன்னேரம் கைது செய்யப்பட்டிருப்பார்" என்று எண்ணிக்கொண்டே நடந்தான் சூர

# சுவைத்ததைச் சொல்கிறோம்

அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட தமிழ் இலக்கிய ஏடாகிய காஞ்சியை கட்டிக் காப்பது நமது கடமை என்பதை உணர்கின்றேன்,

இதழில் போட்டிக் கவிதை வெளியிட்டால் சிறப்பாக இருக்கும் என்பது என் நோக்கம். ஆவன செய்வீர்களா? திரு. அரிமதி தென்னகனின் படைப்புகள் ஒவ்வொன்றும் கருத்துக் கருவூலங்கள். தொடர்ந்து வெளியிடுங்கள். பல இன்னல்களின் நடுவில் தாங்கள் இதழ் நடத்தும் நிலையை நன்கறிவேன், தளராமல் மேலும் பணியாற்றி காஞ்சியின் வளர்ச்சி சிறக்க வாழ்த்துகின்றேன்.

கருமலைப்பழம்நி, ஊத்தங்கரை.

தமிழினத்துத் தந்தைக்கு வெள்ளிப்பாளம்
தந்ததைத் தாளாமல் பார்ப்ப னத்தீ
தினமணியார் தீட்டியதைத் தமிழர் "பொடியன்"
திறமையாய் சாற்றிபுதுச் சவுக்கால் அடித்த
மனநெறியைத் தமிழரெலாம் மனதில் கொண்டு
மடநெறிப் பார்ப்பனரின் மடமை அறுத்தால்
இழிநெறியைப் பார்ப்பனப் பேய்கள் இனியும்
ஏற்காமல் விட்டுவிடும் என்ப(து) உண்மை!

கவிதா, பாலக்கோடு.

7—11—71 காஞ்சி இதழில் வெளிவந்துள்ள "வானுலகில் ராசராசன்" என்னும் அப்போலோ கட்டுரை மிகமிக அற்புதமாக அமைந்திருந்தது! மூடக் கொள்கைகளை மிகவும் வன்மையாகவும்—நயமாகவும் தாக்கி விமர்ச்சித்து எழுதியிருந்த அந்த பேட்டிக் கட்டுரை நன்கு தெளிவாக எழுதப்பட்டிருந்தது. கருத்தில் தெளிவு இருந்தது! நடையில் நளினமிருந்தது. "அறிவு ஒளி"யின் இலக்கியக் கட்டுரை மிக நேர்த்தி,

பா. வரதன், கலவை.

'தியாகத்தில் பூத்த மலர்' என்ற அரிய கட்டுரையை 14—11—71ஆம் நாளிட்ட காஞ்சி ஏந்தி வந்திருக்கிறது. அருமையான ஒரு படைப்பு அது. எதிரிகளின் வாதத்தை, எதிரிகளின் வார்த்தைகளைக் கொண்டே மடக்கி இருக்கிறார் அண்ணாமலை. அவரைத் தொடர்ந்து எழுதச் செய்தால் எங்களுக்குப் பயன் உண்டு.

—எம். ஜோசப், சென்னை-1.

'பொடியன்' எழுதிய "எரிவதை இழுத்தால்...?" என்ற உணர்ச்சிக் கட்டுரையைப் படித்து எனது இரத்த நாளங்கள் முறுக்கேறி விட்டன. கொழுத்த யானை என்ற நிலையிலிருந்து தமிழன் மாறியாக வேண்டும்! மாறத்தான் போகிறது எதிர்காலம்!

—பொ. தமிழினியன், யானைக்காரன்வலசு.

ஆரியக் குள்ளநரிகளின் பூச்சு வேலைகளை அழகாகப் படம் பிடித்துக் காட்டத் தொடங்கி விட்டீர்கள். மீண்டும் இனப்போர் முழுவேகத்துடன் நடந்தாக வேண்டும் என்ற நிலையேற்பட்டு விட்டிருப்பதை மறுக்க முடியாது. வெல்க உங்கள் முயற்சி!

—மு. செ. இராகவானந்தம், பொள்ளாச்சி.

நிமிலன். "இளவரசர் எப்படியும் திரும்பி வருவார்; ஆட்சி அதிகாரத்தில் அமர்வார். அப்போது அந்த முதலமைச்சர் பதவி நிச்சயம் தனக்குத் தரப்படும்" என்ற மனநிறைவு ஏற்பட்டது அவனுக்கு.

* * *

கமணன் தொடர்பாக மன்னர் இட்ட கட்டளை பற்றிய செய்தி கிடைத்தபோது அரசி விகாரதேவி கூடசற்று திகைத்தேவிட்டாள்! என்றாலும்கமணனது துடுக்குத்தனம் நிச்சயம் அனுமதிக்கப்படக் கூடாததுதான் என்பதை அவளது இதயம்கூட ஏற்றுக் கொண்டது. எனினும், அவனை அதற்காக கைது செய்யும்படிக் கூறியிருக்கக்கூடாது என்றும், அவனும் ஓடிப்போயிருக்கக் கூடாதென்றும் எண்ணினாள். விரைவில் போர் நடைபெறவேண்டிய ஒரு நெருக்கடியான நேரத்தில், இப்படியொரு அசம்பாவிதம், ஒரு துர்ச்சகுனம் என்று எண்ணிக் கலங்கினாள். அந்தக் கலக்கத்துடனேயே அவள் மன்னரைச் சந்திக்க வந்தாள். மன்னர் தங்கி இருந்த அவரது தனியறைக்குள் அவள் நுழைந்தபோது, அவளுக்கும் ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஏற்கெனவே, அவர் போர் நிறுத்தத்துக்காக மேற்கொண்டிருந்த கடும் உழைப்புக் காரணமாகவும், இடையே எதிர்ப்பட்டவைகளால் நேர்ந்த மன உளைச்சல்கள் காரணமாகவும் மிகவும் குழம்பிப் போயிருந்தது மட்டுமல்லாமல், உடல்நிலையிலும் அவர் மிகவும் நலங்குன்றிப் போயிருந்தார்.

போருக்கெதிரான தனது திட்டங்கள், தொடர்புடையவர்களுக்குத் தெரிந்துபோனால், விளைவுகள் கடுமையாக இருக்கும் என்பதை முன்கூட்டியே அவர் எண்ணிப்பார்த்திருந்ததைப் போலவே, அவர் எண்ணிப்பார்த்துக் கணித்திருந்ததையும்விட, அவமானகரமானநிலை பிறந்துவிட்டதே என்பதை அவர் நினைந்து பார்க்கும்போது, அதனை ஏற்றுச் சீரணித்துக்கொள்ளும் அளவில் அவரது இதயம் வலிமையுடையதாக இருக்கவில்லை.

நைந்துபோன இதயங்களால், எப்போதுமே எதிர்ப்பைச் சமாளிக்க முடியாதுதானே! உடலின் எந்த பாகம் நைந்துபோனாலும் கேடு இல்லை; இதயம் மட்டும் வலிவாக இருந்துவிட்டால்! அந்த இதயமே கேடுற்றுவிட்டபோது, உடலின் பிற பாகங்களும் தானாகவே கேடுறக் கேட்கவேண்டுமா என்ன?

சில நாட்களாவே காகவனதீசர், எந்த ஒன்றைப் பற்றியும் எண்ணிப்பார்த்து, அதன் விளைவுகளைத் திடப்படுத்தி, அந்தத் திடத் தீர்வைச் சுமக்க முடியாத பலவீனத்துக்கு ஆட்பட்டுப் போயிருந்ததனால், கமணன் பெண்ணுடைகளை அனுப்பிவைத்த அந்த சம்பவத்தைச் சுமந்துகொள்ள முடியாமல் திணறினார். அந்தத் திணறல், அவரது முதுமையின் இயலாமையை மிகுதிப்படுத்திவிட்டது!

தலையைப் பிடித்துக்கொண்டு மஞ்சத்தில் அமரப் போனவரின் தலை, தானாகவே கீழே சாய்ந்தது! உருண்டார் கீழே! அவரால் தாளமுடியாத அளவுக்கு வாந்தியெடுக்கத் தொடங்கிவிட்டார்!

அவர் வாந்தியெடுத்து எடுத்து மயங்கிக்கொண்டிருந்த நேரத்தில்தான் விகாரதேவி உள்ளே நுழைந்து, அந்தக் காட்சியைக் கண்டு கலங்கினாள்! அதிர்ந்தாள்!

மன்னரின் அந்த நிலையில் கமணனைப்பற்றியோ, வேறு எந்த ஒன்றைப் பற்றியுமோகூட கேட்பது சரியல்ல என்று எண்ணிக்கொண்டு, பாய்ந்துவந்து மன்னரைத் தாங்கிக்கொண்டாள், கீழே உருளப் போனவரைத் தடுத்து.

கட்டான உடம்பும், வலிவும் மன்னரைத் தூக்கி மஞ்சத்தில் கிடத்தப் போதுமானதாக இருந்தது விகாரதேவிக்கு. மஞ்சத்தில் கிடத்திவிட்டு, பணியாளை அழைத்தாள். பணியாள் வந்ததும், உடனே மருத்துவரை அழைத்துவா எனப் பணித்துவிட்டு, தானும் மஞ்சத்திலமர்ந்து மெள்ள அவரது நரைத்த முடியைக் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் முதலமைச்சர் காசியபர், கமணனைப்பற்றிய செய்தியைக் கூற உள்ளே நுழைந்தார்.

திடுக்கிட்ட அவர், விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, கவலையடைந்தார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் கமணன் ஓடிப்போனதும், கமணன்மீது பகை கக்கிக்கொண்டு தீசன் ஓடிப்போய் இருக்குமிடம் தெரியாமலிருப்பதும், ரோகணரடாவுக்கு விரைவில் அழிவுவரப் போவதற்கான அறிகுறியோ என்று தன்னுள் எண்ணிக்கொண்டு கலங்கிக்கொண்டிருந்தார். விகாரதேவியின் இதயத்திலும் இதே போன்ற எண்ணங்களே முளைவிட்டுக் கொண்டிருந்தன.

காகவனதீசரின் உடல், அனலாகக் கொதிக்கத் தொடங்கிவிட்டது. இருமல் வேறு வந்து தொற்றிக் கொண்டால் கேட்க வேண்டுமா! படாதபாடுபட்டுக் கொண்டிருந்தார் அவர் மஞ்சத்தில், மருத்துவர் வருவதற்குள்ளாக.

செய்தி கேட்டு அரண்மனை முற்றும் பரவி பரபரப்படைந்தது போலவே, அரண்மனையைக் கடந்தும் போய்க்கொண்டிருந்தது காகவனதீசரைப் பற்றிய செய்தி!

மருத்துவர் வந்து நாடி தொட்டுப் பார்த்தார். முதலில், அங்கே எடுக்கப்பட்டிருந்த வாந்தியைச் சுத்தம் செய்யும்படிக் கூறினார். அது நடந்துகொண்டிருக்கும்போதே, மருத்துவர் ஏதோ சில மருந்து வகைகளை யெல்லாம் எடுத்து மன்னரின் வாயில் நுழைத்துக் கொண்டிருந்தார். சில வகைகளைத் தேனில் குழைத்து நாவில் தடவிவிட்டார்! பயப்பட எதுவும் இல்லை என்ற செய்தியை கவலையுடன் இருந்த மற்றவர்களிடம் சொன்னார்.

சிலவகை மருந்துப் பொடிகளையும், சில மாத்திரை வகைகளையும் விகாரதேவியிடம் கொடுத்து நான்கு நாழிகைக்கு ஒருமுறை மன்னருக்குக் கொடுக்கும்படிக் கூறிவிட்டு, மறுநாள் காலை வருவதாகக் குறிப்பிட்டுவிட்டு அவர் போய்விட்டார்!

விகாரதேவியின் யோசனையின்படி உடனே நாட்டின் பல பகுதிகளுக்கும் ஆட்களை அனுப்பி கமணனையும், தீசனையும் கண்டு பிடித்து அழைத்து வரும்படி உத்திரவிட்டார் காசியபர். மூலைக்கொருவராகப் பறந்தனர் பணியாட்கள்!!

* * *

அருவிப் பக்கமிருந்து, மண்டையி லடிபட்டு விடுதிக்கு வந்து சேர்ந்த நந்திமித்திரனுக்கும் இச் செய்தி கிடைத்தது. கமணன் ஓடிப் போய்விட்டான் என்பதும், மன்னர் உயிருக்கு மன்றாடும் நிலையில் என்பதும், கவலையும் மகிழ்ச்சியும் தரக்கூடிய இரு செய்திகளாக இருந்தன நந்திமித்திரனுக்கு!

கமணன்மீது பாய்ந்த கணை, அடுத்துத் தன் மீதும் பாயக்கூடும் என்பதை எண்ணிக் கொண்ட போது, தானும் உடனடியாக ஓடித் தப்பிவிட வேண்டும் என்றுதான் எண்ண முடிந்தது அவனால்! அதுவே சரியானதாகவும் பட்டது அவனுக்கு. தப்புவதாகவும் இருக்கட்டும்; போர்க் கருவிகளைப் பார்வையிட்டு விடுவதாகவும் இருக்கட்டும் என்று உடனேயே கிளம்பிவிட்டான் அங்கிருந்து.

அனுராதபுரம் பாதையில், வேகமாகக் குதிரையை விரட்டிக்கொண்டிருந்த நந்திமித்திரன், எதையோ எண்ணிக்கொண்டு, முதலில் கமணனைத் தேடலாம் என்று திரும்பினான்! எங்கெங்கோ மாற்றுருவில் குதிரையின்மீதே திரியத் தொடங்கினான்!

* * *

ஒரு கிழமைவரையில், அன்றாடம் மூன்று நான்கு தடவைகள் மருத்துவர் வந்துபோய்க் கொண்டுதானிருந்தாரே தவிர, மன்னரின் உடல்நிலையில் மாறுதல் தெரியவில்லை; மாறாக மற்றவர்களது மனக்கவலைகள் மாறும்படியாக மாற்றம் ஏற்பட்டுக்கொண்டே இருந்தது, எனினும் 'கவலைப்படத் தேவையில்லை' என்ற தயார் மருந்தைஎல்லோருக்கும் எப்போதும்போலவே மருத்துவர் கொடுத்துக்கொண்டேதான் இருந்தார்.

இதற்கிடையே, கமணன் மலைய நாட்டில் ஒரு பௌத்தவிகாரையில் தங்கி இருப்பதாகச் செய்தி கிடைத்தது விகார தேவிக்கு. இப்போதும் அவனை அழைத்துவர சூரநிமிலனே அனுப்பப்பட்டான். கைதுசெய்யப்போவதில்லை என்று தெரிவிக்கும்படி காசியபரே சொல்லி அனுப்பினார். என்றாலும் தன்னால் வர முடியாது என்ற பதிலை அவன் சொல்லி விட்டான் எனக் கேட்டு விகார தேவியும் கவலையடைந்தாள். காசியபரும் வருந்தந் தொடங்கினார்.

அன்று. காலைக் கதிரவன் கதிர்களைப் பரப்பி உலா புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த நேரம். அரண்மனையிலிருந்த அத்தனைப் பேரையும் கவலையில் நிரந்தரமாக மூழ்க விட்டுவிட்டுப் போய்விட்டார் காகவனதீசர். ஆமாம், அமைதியாக அவர் ஆவி பிரிந்துவிட்டது, மனைவியின் மடியில்!

மரணச் செய்தியைக் கேட்டும் கூட, கமணன் அந்திமக்கிரியைகளின், கடமைகளுக்காகக் கூட வர மறுத்து விட்டான்! மன்னர் மீது அத்தனை ஆத்திரமோ என்னமோ!

தீசன் இருக்குமிடம் தீகவாபிதான் என்றாலும், மகாகாமா அரண்மனையினருக்கோ, அவன் இருப்பிடத்தைத் தேடிக்கொண்டிருந்தவர்களுக்கோ அது தெரியவே இல்லை. அதனால் அந்தச் சேதி அவனுக்குத் தரப்படவில்லை. என்றாலும் அந்த மரணம் பற்றிய செய்தி அவனுக்கு எட்டத்தான் செய்தது. அதுமட்டுமல்ல ஓடிப்போய் ஒளிந்துகொண்டிருக்கும் கமணன், கிரியைகளுக்காகக்கூட வர மறுத்துவிட்டான் என்ற தகவலும் கிடைத்தது தீசனுக்கு.

மன்னரின் சடலத்தை எடுத்துக்கொண்டுபோய் தீசமகாராமா என்ற சேதியத்தில், பௌத்த பிக்குகளிடத்தில் ஒப்படைத்தாள் விகாரதேவி! அடக்கச் சடங்குகள் அந்தச் சேதியத்திலேயேநடைபெற்றுக்கொண்டிருந்தன. அங்கே வந்து சேர்ந்து விட்டான் தீசன்!

சோகச் சூழலுக்கிடையேயும் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது அனைவருக்கும்!

கடமைகள் அனைத்தும் முடிவுற்றுப் போய்விட்டன. ஆட்சிப் பொறுப்புக்கள் அனைத்தையும் முதலமைச்சர்காசியபரிடம் ஒப்படைத்துவிட்டு விகாரதேவியும் தீசனும் தீகவாபிக்குப் புறப்பட்டு விட்டனர்.

* * *

இதுவரைக்கான செய்தியனைத்தையும் சேகரித்துக் கொண்ட நந்திமித்திரன், இனி தான் மாற்றுருவில் திரியவேண்டிய அவசியமில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். கமணன் இருக்குமிடத்தையும் அரண்மனையிலிருந்தவர்கள் மூலம் அறிந்துகொண்டான். கமணன் விஷயத்தைப் பிறகு கவனிக்கலாம்; முதலில் தம்பலைக்குச் சென்று வரலாம் என்று புறப்பட்டு விட்டான்!

முன்னிரவு நேரம் அது! அனுராதபுரம் பாதையில், மகாகாமாவின் எல்லையில் நந்திமித்திரன் போய்க்கொண்டிருந்தான். குதிரையின் காலடியோசையைத்தவிர வேறெதுவுமே கேட்காத நிசப்தம் நிலவிக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில்தான் பிடித்துக்கொண்டது பேய்மழை! மழை மட்டுமல்ல; பலத்த சூறைக்காற்றும்! நந்திமித்திரனால் அந்த காற்றிலும், மழையிலும் நடந்துபோய்விட முடியும்! ஆனால் குதிரை?


இன்னும் கொஞ்ச தூரத்தில் பயணிகள் விடுதியொன்று இருப்பது அவனுக்குத் தெரியும். சிரமப்பட்டு அங்கே போய்ச் சேர்ந்துவிட்டால் மழை விடும் வரையில் தங்கி இருந்துவிட்டு, மேலே பயணத்தைத் தொடரலாம் என்று நினைத்து குதிரையின் கடிவாளத்தைச் சுண்டினான். என்றாலும் குதிரை அடியெடுத்து வைக்க மறுத்துவிட்டது; மாறாக இடக்கு வேறு செய்துவிட்டது!

ஆத்திர மடைந்த நந்திமித்திரன், குதிரையை அங்கேயே, ஒரு மரத்தில் பிடித்துக் கட்டிவிட்டு, மழையையும், காற்றையும் எதிர்த்து நடக்கத் தொடங்கினான்! வெகுதூரம் வரையில் குதிரையின் கனைப்புச் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தது.

ஏற்கெனவே தலையில் பட்ட காயத்துக்கு எந்த மருத்துவமும் செய்து கொள்ளவில்லை. ஆனாலும் அவனது மனத்துணிவு, அந்தக் காயத்தைக் கொசஞ்ம் கொஞ்சமாக ஆற்றிக் கொண்டிருந்தது. அதற்குக் கேடாக வந்து சேர்ந்தது இந்தப்பயணமும், பேய் மழையும்.

சூறைக்காற்றில் அவன் தூக்கியெறியப்பட்டுவிடவில்லை; என்றாலும் அத்தகைய சந்தர்ப்பங்களை அவன் சந்திக்கவே வேண்டியிருந்தது. தாறு மாறாக அடிபெயர்ந்தும், கிளை முறிந்தும் விழுந்து கொண்டிருந்த மரங்கள் விளைவித்த பேராபத்துக்களிருந்து கூட அவன் தப்பினான் என்றால், அவனால் ரோகணரடாவுக்கு ஏதோ இன்னும் முக்கியமான ஒருகாரியம் ஆகவேண்டியிருக்கிறதோ என்னவோ! கண்ணைப் பறிக்கும் மின்னல்களே அந்தச் சூழலின் அச்சத்தை மிகுதிப்படுத்தின வென்றால், இடிகள் என்னபாடு படுத்தி இருக்கும்!

இத்தனையையும் சமாளித்து அவன்பயணிகள் விடுதிக்கு வந்துசேர்ந்தபொழுது, மிகவும் சோர்ந்து போய் விட்டான். இனிமேலும் தொடர்ந்தால் தன்உயிர் தனக்குச் சொந்தமாக இராது என்பதை உணர்ந்தான்! அவ்வாறு அவன் உணராமல், அந்த விடுதியிலே தங்காமல் மேலே நடந்து போக முயன்றிருந்தால், அந்த விடுதியில், அந்த விருந்து அவனுக்குக் கிடைத்திருக்குமா?



இக் கட்டுரைப் பகுதி தொடர்ந்து வரும். ஆரிய மாயையையும், புரட்டுக்களையும் காலச் சூழ்நிலையோடு புரட்டிக் காட்டும்; தேவாலயப் பாதுகாப்பு என்பதன் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தும்.

படை திரட்டும் பக்தர்களே: (1)

# நல்லதல்ல; நல்லதள்ல; நல்லதல்ல!

"பொடியன்"

'தியாகபூமி' என்றொரு ஏடு; தேசிய வார ஏடு; தேசியத்தின் மேல் தெய்வம் ஏறியதால், 'ஹிந்து தேவாலயப் பாதுகாப்பு மலர்' ஒன்றினை வெளியிட்டு 'சாமியாடி'யுள்ளது அந்தஏடு. 28-10-71 ஆம் நாளிட்ட அந்த 'மா மா' மலரில் வகுப்புவாதமும், கொலை வெறிப் போக்கும், இந்து முஸ்லீம் என பிளவுபடுத்தும் ஈனத்தனமும் நச்சுப் பாம்புகளாக மறைந்துள்ளன. ஆலயப் பாதுகாப்பு மலர் என்ற போர்வையில் சில அரசியல் பண்டாரங்கள் தூண்டிவிடும் திருத்தொண்டில் ஈடுபட்டு, தெய்வத்தின் பெயரால் மக்களைத் திசை திருப்ப எண்ணியுள்ளார்கள்.

செத்து மடிந்து, புதைத்த இடத்தில் புல் முளைத்துப் போன மத வெறிக்குப் புத்துயிர் ஊட்டுவதன் மூலம், மற்றுமொரு 'நவகாளி'யினை இந்த மண்ணில் நடத்திக் காட்டும் முன்னோடித் திட்டமாக முகிழ்த்திருக்கும் தியாகபூமி மலரை அரசு அணு அணுவாக ஆராய்ந்து பார்ப்பது வரவிருக்கும் வன்முறைப் போராட்டத் திட்டங்களை அறிந்துகொள்ளத் துணை புரியும்.

எத்தனையோ பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரசுக்கும், காவல் துறையினர்க்கும் இனவெறி ஈனர்கள் மூட்டவிருக்கும் மதவெறித் தீயை எடுத்துக்காட்டுவது யார்? நாம்தானே!! இந்துக்கள், முஸ்லீம்கள், கிருத்துவர்கள் என்னும் வேறுபாட்டை வளர்த்தும், பகைமூட்டி, வெறுப்புத் தீயை வளர்த்துக் குளிர்காய நினைக்கும் குருட்டு மனத்தினரை அடையாளங் காட்டவேண்டிய கடமை அமைதியை விரும்புவோரின் அரிய கடன் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

வடபுலத்தில் கொடிகட்டிப் பறக்கும் 'ராஷ்டிரிய சுயம் சேவாசங்' என்னும் அமைப்பும், ஜனசங்கம், இந்துமகாசபை போன்ற அமைப்புகளும் இந்தியா என்றால் ஹிந்து மதத்தினர் வாழும் நாடு; இங்கு வேற்று மதத்தார்கள் வாழ்ந்திடக் கூடாது என்னும் கருத்தினைப் பரப்புவதால்தான் இந்தியாவில் காலூன்றி வருகின்றன என்பதையும் நினைவிற்கொண்டு, தியாகபூமி மலர் வளர்த்துள்ள தீயின் தன்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தேசிய வார ஏடு என்று மகுடமிட்டு வரும் தியாகபூமி ரா. சு. சே. சங்கத்தின் (R.S.S.) ஏடு என்பதையும், நாம் இணைத்துப் பார்த்தால் தான் தெளிவாகநாம் சில உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியும். இந்தத் தியாக பூமி எல்லா மாநில மொழிகளிலும் வெளிவருகின்றது என்றும் கேள்விப்படுகிறோம்.

இவ்வளவு அடிப்படைகளையும் ஈங்கு விளக்கிக் காட்டுவது, இந்த மலரில் காணப்படும் ஒவ்வொரு வரிகளும் நஞ்சில் தோய்த்தெடுக்கப்பட்டன என்னும் உண்மையை எளிதாகக் காட்டுவதற்கே.

தேவாலயப் பாதுகாப்பு என்ற பெயரில் இஸ்லாமியத் தோழர்களின் மீதும், கிருத்துவ நண்பர்களின் மீதும் வெறுப்பை வளர்க்கும் பணியைத்தான் இம்மலர் செய்துள்ளது. இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்களே என்பதை ஏற்றுக்கொள்ளாமல், ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே ஹிந்துக்கள் என்னும் கருத்தை நிலைநாட்டி, மற்றைய மதத்தினர்கள் அனைவரும் வெளியேற்றப்பட வேண்டியவர்களே என்பதை நிலைநாட்டத் துடிக்கும் தியாக பூமி மலர் இந்திய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் வைக்கப்பட்ட வெடிகுண்டாகும் என்பதை மறுக்க முடியாது.

எல்லையில் அந்நியரின் தொல்லை என்னும் நிலையில், இந்த மலரில் வந்துள்ள கருத்துக்கள், நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இஸ்லாமியரின்மீது எதிர்ப்பு என்னும் தங்கள் நினைப்பை நிறைவேற்றிக்கொள்ளும் நிலையில் இருக்கின்றன என்பதை மத்திய அரசும், மாநில அரசும் உணர்ந்து, உடனடியாக ஆவன செய்வது நலம்.

மலரைச் சமர்ப்பணம் செய்ய வந்த ஆசிரியர், "பாரதத்தாயின் இந்த அமுதக் கலசங்களைச் சிதைத்தன வெளியிலிருந்து வந்த இஸ்லாமிய வெறிக் கும்பல்கள்" என்று சுட்டி விளக்குகின்றார்.

இந்நாட்டில் உள்ள இஸ்லாமியர்கள் வெளியிலிருந்து வந்தவர்கள். இந்தியாவின் கோயில்களைச் சூறையாடிய வெறிக் கும்பல்களின் வழிவந்தவர்கள் என்று மக்களைத் தூண்டிவிடுவதும், மதவெறிக்குத் தூபமிடுவதும், அதுவும் இன்றைய நிலையில், எவ்வளவு பெரிய கொந்தளிப்பை உருவாக்கும் என்பதை அரசு உணர்ந்து பார்க்கவேண்டும்.

19—9—71 சென்னையில் நடைபெற்ற மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். தியாகராய நகரில் முஸ்லீம்கள் 'நமாஸ்' செய்வதை வன்மையாகக் கண்டிக்கின்றார்களாம்; கண்டிக்கட்டும்; ஆனால், அதற்கு மேலும் சென்று, "முஸ்லீம்கள் ஹிந்துக்களின் எண்ணங்களைத் துச்சமாக மதிப்பார்களேயானால், தியாகராய நகர் ஹிந்துப் பெருமக்கள் அவர்களைச் சமுதாய பகிஷ்காரம் செய்யும் நிலைக்கு உந்தப்படுவார்கள் என்று இம்மாநாடு முஸ்லீம்களுக்கு எச்சரிக்கைவிடுகின்றது" என்று தீர்மானம் போட்டுள்ளார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஹிந்து தேவாலயப் பாதுகாப்பு என்பது முஸ்லீம் பெருமக்களுக்கு முடிந்தவரையில் தொல்லை தருவது என்பதுதானே. சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள் என்று எச்சரிப்பது, சமூகத்திலிருந்து முஸ்லீம்களை விலக்கிவையுங்கள் என்று தூண்டிவிடுவதுதானே!! ஒரேநாடு; ஒரே இனம்; நாமெல்லாம் இந்தியர்கள் என்ற உணர்வுக்குக் குழிதோண்டும் குள்ளநரித்தனம் எள்ளுதற்குரியது தான் என்றாலும், இது சட்டப்படிக் குற்றமல்லவா?

முஸ்லீம்கள் என்றால், ஹிந்து மதத்திற்கும், ஹிந்துக்களின் கோயில்களுக்கும் விரோதிகளே என்பதைச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் மலரின் ஒவ்வொரு எழுத்தாளர்களும் மறக்காமல் நிலை நாட்டியுள்ளார்கள். சமர்ப்பணம் செய்த ஆசிரியர் கோயில்களை அழித்தவர்கள் முஸ்லீம் வெறியர்களே என்று வரலாற்றைக் காட்டினார்; தேவாலயப் பாதுகாப்புக் குழுவின் செயலாளர் இராமஸ்வாமி அவர்களோ, அந்த நாளில் மட்டும் என்ன, இந்த நாளிலும் அப்படித்தான் என்று பட்டியல் போட்டுக் காட்டுகிறார். அவர்தான் என்ன செய்வார் பாவம்; அவர் ஆசை அப்படி!! பாரத நாடு 'ஒரு ஹிந்து ராஷ்ட்ரமாக அமையவேண்டும்' என்ற அவர் ஆவலை நிறைவேற்றிக் கொள்ள, மயிலாப்பூர் மண்டபத்தை மொகரம் பண்டிகைக்கு விடலாமா என்கிறார்; சேலத்தில், கோட்டை மாரியம்மன் கோயிலைச் சுற்றியுள்ள காலி நிலங்களில் முஸ்லீம்கள் ஆக்ரமித்துக் கொண்டார்கள் என்று குதிக்கிறார்; பிள்ளையார் கோயிலை ஒரு முஸ்லீம் தன் ஒட்டலுக்குப் புலால் நறுக்கும் இடமாக உபயோகித்தார் என்று ஓலமிடுகிறார்; பழனியில் மலையேறும் படிகளில் உள்ள எல்லாக் கடையும் முஸ்லீம்களுக்கு விடலாமா என்று பாய்கிறார்.

முருக பக்தராக உள்ள முஸ்லீம்களையும், நாகூர் மொட்டையடிக்கும் ஹிந்துக்களையும் அறியாதவரல்லர் இராமஸ்வாமி. அறிந்திருந்தும் இப்படி ஆடுவானேன்? கோயில் நிலத்தை ஆக்ரமித்துள்ள ஹிந்துவே கிடையாதா? கோயில் சொத்தால் உடல் கொழுக்கும் எத்தனை ஹிந்துப் பெருச்சாளிகளை இந்த நாடு கண்டிருக்கிறது!! கோயிலில் பெண்களைக் கற்பழித்த ஹிந்துக்களை நாமறியோமா? இப்படி மனிதன் என்ற நிலையில் அறிந்தோ, அறியாமலோ செய்யும் தவறுகளுக்கு மதத்தைக் காரணமாக்கலாமா? கூடாது என்று நண்பர்க்குத் தெரியும்; தெரிந்தும் இந்தத் திருவிளையாடல் செய்யக் காரணம் முஸ்லீம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் மோதலை உருவாக்கவேண்டும் என்ற நைப்பாசைதான்!!

இந்தியாவில் வாழும் ஒவ்வொருவரும் சகோதரர்கள் என்பதனால் தானே பாரதத்தாய் என்று பறைசாற்றுகிறோம். அதை மறந்து மத வெறியைத் தூண்டுவது இந்த நாட்டைத் துண்டாடச் செய்யும் துடுக்குத்தனமாகாதா? எல்லோரும் ஒன்றாகி எதிரிகளைச் சந்திக்க வேண்டிய நேரத்தில் இப்படிச் சதி செய்வோரை அந்நிய நாட்டினரின் 'ஏஜெண்ட்டு'கள் என்றால் பொய்யாகுமா?

சென்னை மாநாட்டுத் தீர்மானத்தைப் போன்றே சேலம் மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றைத் தொல்லைதரும் முஸ்லீம்கள் என்று தடித்தத் தலைப்பிட்டுக் குறிப்பிட்டுள்ளது மலர். சமய ஊர்வலங்கள் மசூதி முன்னால் வரும்போது, முஸ்லீம்கள் பல தொல்லைகள் கொடுத்து வருகின்றனராம். அதனால், ஹிந்து ஊர்வலம் வரும் வழிகளில் மசூதிகள் கட்ட அனுமதிக்கக்கூடாதாம். இதுதான் தீர்மானம்.

சிவன் கோயில் ஊர்வலத்தில், பெருமாள் கோவில் ஊர்வலத்தில் அடிதடிகளும், கொலைகளும் இந்நாட்டில் நடைபெறவில்லையா? எந்த நாமம் போடுவது என்பது வழக்கு மன்றத்திற்கு வரவில்லையா? திருப்பதி 'லட்டு' விவகாரம் நீதிபதியின் தீர்ப்பிற்கு விடப்படவில்லையா? மாமியார் உடைத்தால் மண்பாண்டம்; மருமகள் உடைத்தால் பொன்பாண்டம் என்பது போல் முஸ்லீம்கள்தான் தொல்லைகள் தருகின்றனரா? முஸ்லீம்களின் ஊர்வலங்களின் ஹிந்துக்கள் கலவரம் விளைத்ததே கிடையாதா? அப்படி விளைத்தது உண்மையென்றால், எங்கள் ஊர்வலம் செல்லும்வழியில் ஹிந்துக் கோயில்கள் இருக்கக் கூடாது என்று தீர்மானம் போடலாமா? அமைதியாக நடையிடும் தமிழகத்தில் 'அகமதாபாத்தை' உருவாக்க நினைக்கும் அற்ப ஆசை வேண்டாம். 'தொல்லைதரும் முஸ்லீம்கள்' என்று கோடிட்டுக் காட்டுவதன் நோக்கம் மதவெறி மோதலை உருவாக்குவதுதான் என்றால், அரசு இதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதும் மெய்தானே,!

'தலைவாய் அரியநாதர்' என்னும் துணைப்பாட நூலிலிருந்து ஒரு பகுதியை வெளியிட்டுள்ளது தியாக பூமி. அந்தக் கட்டுரைக்கு ஆசிரியர் ஒருகுறிப்பையும் எழுதியுள்ளார். "ஆலயம் அழித்தலும் இருமறை பழித்தலும்" புரிந்த அந்த அட்டூழிய முஸ்லீம்களைவிட..." என்று குறிப்பிட்ட, ஆசிரியர் எதைச்சாதிக்க நினைக்கின்றார் என்பதைச் சொல்லாமலேயே புரிந்து கொள்ளலாம்.

முஸ்லீம்களின் படையெடுப்பு வரலாற்று உண்மைகளாகவும் இருக்கலாம்; அந்த உண்மைகளைப் பயன்படுத்திக் கொண்டு, எப்போதோ நடந்த இரண்டொரு செயல்களைச் சுட்டிக்காட்டி, இப்போது ஒரு மோதலை உண்டாக்க நினைப்பது அரசியல் சட்டப்படி ஒரு கொலைவெறிக் குற்றமாகாதா?

"இவனுடைய அப்பாதான், உன் தந்தையை அப்போது அடித்தார்" என்பது நடந்த நிகழ்ச்சியைச் சுட்டுவதா? அல்லது, "இவனுடைய அப்பா, உன் அப்பாவை அடித்தார்; எனவே, நீ இப்போது இவனை வஞ்சம் தீர்த்துக் கொள்" என்று உசுப்பிவிடுவதா என்பதை நாட்டின் ஒற்றுமையில் நாட்டமுடையோர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'உங்கப்பா ஆற்றைக்கலக்கியிருப்பான்' என்று நரியொன்று அப்பாவி ஆட்டுக்குட்டியின் மேல் பாய்ந்தகதைக்கும் இந்தப் பக்த கோடிகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது.

தேசிங்குமன்னனுக்குக் கிடைத்த மகமத்கான்களைக், காட்டி ஒற்றுமையை உருவாக்க மனமில்லாத இவர்களைச் சட்டம் தண்டிக்காவிட்டால், நாடு மத வெறிக்காடாகி விடும் என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

எத்தனையோ பக்தர்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்துள்ளனர்; கோயில் சொத்தை விழுங்கி ஏப்பம் விட்டுள்ளனர்; கொலை, களவு, கற்பழிப்பு, சூதுபோன்ற கொடுஞ்செயல்களில் மூழ்கிக்கிடந்த எத்தனையோ பக்தர்களை வரலாறு கண்டுள்ளது.

அதற்காக, இப்போதுள்ள பக்தர்களை தண்டிப்பது நியாயமா? அந்தந்தப் பக்தர்களின் வாரிசுகள்

(அடுத்த பக்கம் பார்க்க)

★

## அடுத்த இதழில்....

## கத்தியை எடுத்தவன்....?

பொடியன் விமர்சிக்கிறார்.

# சோழமாதேவி-ஒரு மதிப்பீடு!

நல்ல...உண்மையான இலக்கியச் சுவைஞன் விரும்பும் மணிமணியான கருத்துக்களை ஆங்காங்கே பதித்து, சிந்தையினிக்கும் வடிவங்களைத் தந்து, இதயங் கவரும் நிகழ்ச்சிகளை அற்புதமான உரைநடையில் உருவாக்கி யிருக்கும் சிறப்புமிக்க நவரத்தின மாலையே, 'சோழமாதேவி'!,

வரலாற்றுக் கதை ஆசிரியர்களிடையே நண்பர் திரு. ராஜி-மன்னன் அவர்கள், 'சோழமாதேவி'யின் மூலம் சிறப்பான இடத்தைப் பெறுகிறார்.

விகாரதேவியின் பிறப்பு இரகசியத்தைக் காகவனதீசர், அவளிடமே சொல்லும் (பத்தாம் அத்தியாயம்) நயமும்...நந்திமித்திரனை எள்ளாளர் நடத்தும் (பதின்மூன்றும் அத்தியாயம்) ராஜ தந்திரமும்... ஆமத்தியரும் எள்ளாரும் (பத்தொன்பதாம் அத்தியாயம்) நாட்டு நிலையைப்பற்றிக் கொள்ளும் கவலைகளும்... திருவாரூரார் திருவடி சேர்ந்த (இருபத்தாறும் அத்தியாயம்) செய்தியும் எண்ணி எண்ணி வியக்கத் தக்கவை... சுவைக்கத் தக்கவை!

தத்துவப் பேச்சினை விரும்பும் சுவைஞர்களுக்கு (அத்.18) ரோகண மன்னர் காகவன தீசரும் அமைச்சர் காசியபரும் பேசும் அற்புதமான சிந்தனைக் கருத்துகள் நல்விருந்து ஆகும். குறிப்பாக 'உயிரின் பிறப்பு' பற்றிய விவாதத்தை முன் வைத்துப் படிப்படியாகச் சிந்தித்துச் சித்திரித்துச் செல்லும் அழகும் ஆழமும் கற்றவர்களால் பாராட்டப்படுவதாகும். 'இடைக்காலத்தில் இவையெல்லாம்!' என்ற (29-ஆம்) பகுதி வாசகர்களுக்கு நல்ல திருப்பம்.

மற்றும்......

"ஒரு சிலருக்கு, ஒரு சில வேளைகளில், ஒரு சிலர் மீது ஒருவகையான வெறுப்பு உருவாகும்; இத்தகைய வெறுப்புகளுக்குக் காரியமும் இல்லை; காரணமும் இல்லை.' (அத்-2)

"பயணத்தால் ஏற்படும் களைப்பைவிட, எண்ணங்களின் அழுத்தத்தால் ஏற்படும் களைப்பு அதிகம்.' (அத்-4)

"அரசியானுல் என்ன? அன்றுடங் காய்ச்சியானுல்தான் என்ன? நேரிடையாக ஒருவரால் புகழப்படும்போது, இயல்புக்கும் அதிகமாக நாணம் வந்து பெண்களைப் பற்றிக் கொள்ளும் விந்தை இன்று வரையில் கண்டுபிடிக்கப்படாத ஒரு புதிரல்லவா?' (அத்-9)

'சிந்தனைக்குப் புறச் சூழ்நிலைகள் காரணமாகிவிடுகின்றன.' (அத்-18)

'ஒருவருக்குமேல், இன்னொருவர் அல்லது பலர் ஒன்றுகூடிச் செயல்படும்போது தனித்துவம் மறைந்து, குழு மனப்பான்மை மிகுந்துவிடுகிறது; இதுவே, சமுதாயத்தில் தலையெடுக்கும்போது, சமுதாயம் சீர்கெட்டுவிட்டது என்றோ அன்றி சீரடைகிறது என்றோ சொல்லத் தக்க வகையில் அமைந்துவிடும்.' (அத்-24)

...போன்ற மாணிக்கக் கருத்துகள் ஒவ்வொரு பகுதியிலும் கருத்தை மகிழ்விக்கும் ஒளிக்கதிர்களாகப் பதிக்கப்பட்டுள்ளன.

வெறும் கருத்துக் குவியல்களாக ஆக்கினுல், அது முறுகிய பாலைப் போன்ற கட்டுரைத் தொகுப்பாகிவிடும் என்பதை உணர்ந்து, மிகவும் பக்குவமாகத் தேவைப்படும் இடங்களில் மட்டும், வலிந்து கூருமல், இயல்பாகவே எழும் எண்ண ஓட்டமாக ஆங்காங்கே நல்ல செறிவான கருத்துகளைப் பதித்திருப்பது ஆசிரியரின் கலைத் திறனையும் கற்பனை மெருகையும் பண்பட்ட கைவண்ணத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

'நெடியோன் என்று கூறிச் சிறப்பிக்கப்பெறும் சுந்தர பாண்டியனுல் அகழ்விக்கப் பெற்ற பஃறுளி ஆறு...2100 ஆண்களுக்கு முன்பு அந்த ஆற்றை விழுங்கி நன்னீரை உவர்நீர் ஆக்கி, தமிழகத்தையும் ஈழத்தையும் கடல் என்பதன் பேரால் பிளவு படுத்திய கடல்கோள்...' (அத்—3)

'தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு வந்த நந்தியாவட்டை மலர்...' (அத்—10)

'மனுநீதிச் சோழரின் பிரதிநிதியாக எள்ளாளர் ஈழம் சென்று பௌத்த தேரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஈழத்தில் அமைதியான ஆட்சியை நிறுவியது.' (அத்—1)

'கமணன், அலெக்ஸாண்டரிடம் படை உதவி வேண்டித் தூது போதல்...' (அத்—24)

...போன்று வரும் இடங்கள் வரலாற்றுச் சுவைஞர்களின் இதயத்துக்கு விருந்தளிப்பவை! சிந்தனைக்கு வேலை தருபவை!

ரோகண மன்னர் காகவன தீசரும் அமைச்சர் காசியபரும் பேசும் பேச்சுகளும் (அத்—18)... ரோகண மன்னர் புத்த பிரானைப் பார்த்து மேற்கொள்ளும் சிந்தனைகளும் (அத்-22) தத்துவச் சிந்தனையாளரின் சிந்தனைக்கு அரிய விருந்து!

அர்த்த சாஸ்திரக் கருத்தையும் தமிழ் மறையின் கருத்தையும் இணைத்து (அத்—6) எழுப்பும் விவாதம் இலக்கியவாதிகளுக்கு நல்ல விருந்து!

எள்ளாளர்...சோழமாதேவி ஆகிய இருவருடைய தம்பனை அனுபவமும், காகவன தீசர் போர் நிறுத்தத்திற்கு எடுத்துக்கொள்ளும் ராஜ தந்திர நடவடிக்கைகளும், விகாரதேவியின் வயதுக்கு மீறிய விகார இச்சைகளும் நினைத்துநினைத்து மகிழத்தக்கவை; சிந்திக்கத் தக்கவை!

மொத்தத்தில், 'சோழமாதேவி'யைத் திரு. ராஜிமன்னன் அவர்கள் ஓர் இன்பப் பெட்டகமாக... கருத்துக் கருவூலமாக ... கதைக் குவியலாக ... தத்துவக் களஞ்சியமாக......இவை யாவற்றுக்கும் மேலாக ஒரே தொடரில் சொல்ல வேண்டுமானுல் ஓர் அற்புதமான வரலாற்றுக் காவியமாகப் படைத்துள்ளார்.

இதய இன்சுவையையும்...இன்பப் பொழுது போக்கையும்...... சிறந்த சிந்தனைக் கிளர்ச்சியையும் ஒரே நேரத்தில் சுவைக்க விரும்பும் சுவைஞர்கள் திரு. ராஜிமன்னன் அவர்களின் 'சோழமாதேவி'யை ஆர்வத்துடன் வரவேற்பார்கள்.

—புலவர். தாமரைக் கண்ணன்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்று இன்றையபக்தர்களை வஞ்சம் தீர்த்துக் கொள்வது என்றுல், பக்திப் பூண்டு இந்நாட்டில் இருக்க முடியுமா?

படை திரட்டும் பக்தர்களே, நினைத்துப் பாருங்கள்!! மதமென்னும் ஆற்றில் நீரோட்டம் இருக்கட்டும்; மலர்கள் பூக்கட்டும்; இரத்த ஓட்டம் வேண்டாம்: தலைகள் மலராக வேண்டாம்!! இப்படித்தான் இருப்போம் என்பது பக்திக்கும் நல்லதல்ல; பக்தர்களுக்கும் நல்லதல்ல!! நாட்டுக்கும் நல்லதல்ல!

ஏன்...?

உங்கள் கொடுமைகளுக்கெல்லாம் தாளம் போட்ட அரசுகளை வரலாறு கண்டிருக்கலாம். வாழும் இந்த அரசு, இருபதாம் நூற்றுண்டு அரசு என்பதுதான்!!

*

'ஆலய நிதி துஷ்பிரயோகம்' என்று கூப்பாடுபோடும் குள்ளநரிக் கூட்டத்தின் குரலைப்பற்றி ஆராய்வதுடன் மட்டும் அல்ல—அந்தக் கூப்பாடு ஆரியத்தின் பாதுகாப்புக்காகவும்தான். என்பதை எடுத்துக் காட்டுகிறது இக் கட்டுரை !

# ஆலயப் பாதுகாப்பா ? ஆரியப் பாதுகாப்பா ?

புலவர்
கோ. அண்ணாமலை

'ஏழையின் மகிழ்ச்சியில் இறைவனைக் காண்கிறோம்' என்றும் 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்றும் 'நாம் இறைவனை ஏற்கிறோமா என்பதல்ல, நம்மை இறைவன் ஏற்றுக்கொள்ள என்ன செய்திட வேண்டும் என்பதுதான் நம் கவலை' என்றும் பல்வேறு நேரங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் இறைவனைப்பற்றிய தன் கருத்தை அறிவித்ததுண்டு.

இவைகள் யாவும் நாத்திகவாதிகளின் 'சமத்காரம்' என்றே சிலர்—தூய்மையான ஆத்திகவாதிகள் என்று தம்மைத்தாமே கருதி மகிழ்ந்திருப்போர் எண்ணிவிடுகின்றனர். நோயின் உச்ச கட்டத்தில் நோயாளி தன்இடுப்பிலிருந்து மானத்தைக் காக்கும் ஆடையை நழுவவிடுவதுண்டு; தன் நோயைத் தீர்க்கும் மருந்துகளைக் கூட கீழே உமிழ்ந்து விடுவதுமுண்டு. அத்தகைய செயல்களாகவே காணப்படுகின்றன, இன்றைக்குத் தங்களுக்கும் இறைவனுக்கும் மட்டுமே தொடர்புண்டு என்று கருதுகின்றோர் தம் நடவடிக்கைகளும், பேச்சுக்களும்! தி.மு.கவின் மீது கொண்ட பகை நோய் நெஞ்சத்தில் மிகுதிப்பட மிகுதிப்பட ஆத்திகர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வோர் — திமுக கடவுளைப் பற்றிக் கூறிடும் மொழிகளைக் "கேலி செய்கின்றனர். ஏழையின் மகிழ்வில் இறைவனைக், காண்கிறார்களாம்! 'ஏழை எங்கே மகிழப் போகிறான்—'கிச்சு கிச்சு' மூட்டினால் ஒழிய?" என்று கேட்கிறார்கள்! ஏழையின், மகிழ்ச்சியில் இறைவனைப் பார்க்க முடியுமா என்கிறார்கள்? 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற மொழியையும் அவர்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரிந்திடவில்லை. இவைகள் யாவும் நாத்திகவாதிகளின் மொழிகள் என்கிறார்கள். எனவே இந்த மொழிகளைப் பேசிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆலயங்களின் நிர்வாகத்தினை நடத்துதல் ஆகாது என்றும் அது தொடர்பான பல சில்லரைக் கேள்விகளையும் அடிக்கடி எழுப்புகின்றார்கள்.

நாம் மேலே இறைவனைப்பற்றிக் குறித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிகளை, நாத்திக மொழிகளல்ல; அவை ஆத்திக மொழிகளே என்பதை நிறுவிட விரும்புகிறோம். தெளிவான முறையில்—அவை நாத்திக மொழிகளல்ல என்றுசொன்னால், அவற்றை ஏற்கும் பெருந்தன்மை, நேர்மை ஆத்திக வாதிகளுக்கு இருக்கும் என்றே எதிர்பார்க்கிறோம். மொழிகளைப் படித்தவுடனே அறிந்து கொள்ள முடியும் அவை கடவுளை ஏற்றுக் கொண்டோர் மொழிகளே என்று!

உண்மையாகச் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிகளாக மேலே, காட்டப்பட்டுள்ளவைகள் கீதை முதல் எல்லாவித சமய நூல்களிலும் சொல்லப்பட்டவைகளே!

'ஸ்ரீமத் பகவத் கீதையில்' விபூதி யோகம், இருபதாம் சுலோகத்தில் கண்ணபெருமான் பேசுகிறார்:

"குடாகேசா (அர்ச்சுனா)! நான் எல்லாப் பிராணிகளின் இருதயத்திலும் உள்ளவன். பிராணிகளின் ஆதியும் நடுவும் முடிவும் நானே."

அஹமாத்மா குடாகேச ஸர்வ
பூதாசய—ஸ்த்தித: |
அஹமாதிச்ச மத்யஞ்
சபூதானா—மந்த ஏவ ச ||

எல்லாப் பிராணிகளிலும் இருக்கின்ற இறைவன் ஏழை எளியவர்களிடத்திலே மட்டும் இல்லாமல் போய்விடுவானா? மேலும் கண்ண பெருமான் இன்னின்ன பொருளில் இன்னின்னபடி இருப்பதாகச் சொல்கின்றார். "மலைகளிலே இமயமாகவும் மரங்களிலே அரசமரமாகவும் பசுக்களில் காமதேனுவாகவும் சர்ப்பங்களில் வாசுகியாகவும் நாகப்பாம்புகளுக்குள் ஆதிசேஷனாகவும் இருக்கிறேன்"—என்கிறார்.

பாம்புகளில் எல்லாம் இருக்கின்ற இறைவனை ஏழை எளியவர்களின் மகிழ்ச்சியில் இருக்கிறார் என்று சொல்வது கேலிக்குரியதா? அப்படியானால் அந்தக் கேலி மொழிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினை நோக்கி வீசப்பட்டவை அல்ல; இறைவனையும் அவன் மொழிகளடங்கிய கீதையையும் நோக்கி வீசப்பட்டவைகளே என்மதை நல்லோர் எளிதில் உணர்ந்திடுவர் என்றே நம்புகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தவரைப் பழிப்பதாக எண்ணிக் கொண்டு 'பக்தகோடிகள்' இறைவனைப் பழிக்கும் இந்தப் பரிதாபச் செயலைக் குறித்து நாம் வெட்கப்படுகிறோம். திமுக மீது கொண்ட பகையுணர்வின் அளவற்ற தன்மையால் நோய்க் கொடுமை மீதூரப் பெற்றவன் மருந்தையே உமிழ்ந்திடும் தன்மைபோல — இறைவனையே பழிப்பது எவ்வளவு அறிவீனம், வெட்கக்கேடு!

இந்து சமயத்தை முதன்முதலாக உலக சமயவாதிகள் அனைவரும் அறிந்து போற்றும்படிச் செய்த விவேகானந்தர் மொழிகளைத் தங்களுக்கும் இறைவனுக்கும் மட்டும் தான் சுரங்கவழித் தொடர்பு, வேறு யாருக்கும் இல்லை—இருந்திட முடியாது என்று விண்ணதிர முழங்கும் உயர் சாதிக் கொழுப்பினர் பார்வைக்கு வைக்கிறோம்!

"O Mother! What do I care for name and fame, When my motherland remains sunk in

சிறப்புக் கட்டுரை !

utmost poverty? When millions in India die for want of handful rice, here they spend millions! Who will raise the masses of India? Who will give them bread? O Mother! Show me the way to help them." This feeling further spurred his tremendous will to serve his countrymen.

"இந்திய நாட்டின் கோடான கோடி ஏழை மக்களை ஈடேற்ற—எழுச்சிபெற வைக்க யார் வருவார்? அன்னையே! அந்த ஏழைகளுக்கு உதவிடும் வழியை எனக்குக் காட்டுக"—என்று விவேகானந்தர் கண்ணீர் பெருக—நெஞ்சம் சிலிர்க்க வழிபடும் முறையிலே இறைத்தன்மை இல்லையா? ஆத்திகர் என்று புறவேடம்பூண்டு நிற்கும் ஆஷாடபூதிகள் பதில் தரவேண்டும்.

ஏழைகளுக்காகச் செய்யப்படும் சேவை, தொண்டு-நற்பணி ஆகியவையே இறைவனுக்கான சிறந்த வழிபாடு என்பதை சமயத்துறையில் ஈடும் எடுப்புமற்று விளங்கிவரும் அதே விவேகானந்தர் மொழிகளிலேயே எடுத்துத் தருகிறோம். ஆத்திகர் என்றால் நாங்கள் தான் என்கிற பூசுரர் கூட்டம் படித்துத் தெளிவு பெறட்டும்;

**"Dedicate yourself to the service of God in form of the poor and the downtrodden."**

"ஏழைகளாகவும் அழுத்தப்பட்டுள்ள எளியவர்களாகவும் இருக்கிறவர்களுக்குப் பணியாற்றுதலே இறைவனுக்குச் செய்யப்படும் வழிபாடு! அத்தகைய வழிபாட்டுச் சேவையில் உங்களை நீங்களே ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்!" என்னும் இந்த விவேகானந்தர் மொழி என்ன திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் மொழியா? பொதுச் செயலாளரின் சொற்களா? அறிஞர் அண்ணா எழுதிய எழுத்தா? அல்லது விவேகானந்தர்தான் நாத்திகரா?

எதைச் சொன்னாலும் மறுப்பது எதைச் செய்தாலும் எதிர்ப்பது என்று முடிவு செய்துகொண்டால், எத்தனை தான் பார்ப்பனக் கூட்டம் தனக்கு அறிவிருக்கிறது என்று கருதியிருந்தாலும் அது கெட்டழிந்து போவதற்கு அந்த ஆவேச முடிவே காரணமாக அமைந்திடும் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை.

ஏழைகளுக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவை என்பதை மேலே கீதையின் மொழிகளைக் கொண்டும் விவேகானந்தரின் சொற்களைக்கொண்டும் விளக்கினோம். இந்த இரண்டு மேற்கோள்களுக்கும் தமிழ் மொழிக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதை அனைவரும் அறிவர். தமிழ்த் தொடர்பில்லாத கீதையைக் கொண்டும், விவேகானந்தர் மொழிகளைக் கொண்டும் நம் கருத்தினை வலியுறுத்தக் காரணம் உண்டு!

'தமிழுக்கும் கடவுளுக்கும் ஒத்துக் கொள்ளாது!' 'தமிழையும் இறைவனையும் தொடர்புபடுத்துவதே அபச்சாரம்!'—என்று கூச்சல் கிளப்புகின்றவர்களாக 'அவாள்' இருந்து வருவதால் அவர்கள் போற்றும் கீதையையும் உலகம் போற்றும் விவேகானந்தர் மொழியையும் ஆதாரமாகக் காட்டினோம்; தமிழுக்குத் தொடர்பில்லாத எத்தனையோ உலகப் பெரியார்கள்—சமய நூல்கள்—நீதி நூல்கள் சொல்கின்றவைகளை வைத்தாலும் அவாளுடைய தேவபாடையிலான' கீதைமொழிகளின் அளவுக்குத் 'திருப்தி' ஏற்படாது என்பதனால் கீதையைக் காட்டினோம்!

இனி, கீதையைப் போற்றிய காந்தியடிகள் தம் வழிபாட்டுக் கூட்டத்தில் தவறாமல் பாடிவந்த—நரசிம்ம மேத்தா என்பவர் எழுதிய "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாடலில் அமைந்த கருத்துக்களை ஆழ்ந்து எண்ணிப் பார்த்திட ஆத்திகர்களை அழைக்கிறோம். வைணவன் என்றால் யார் என்னும் வினாவுக்கு விடையாக அமைந்த அந்தப் பாடல், "பிறருடைய துன்பங்களை உணர்கிறவனும், துன்பப்படுவோர்க்கு இரங்கி நன்மை புரிபவனும், உள்ளத்தில் சிறிதும் செருக்கற்றவனும் வைணவன்" என்றும் 'எவ்வுயிரும் தன்னுயிர்போல எண்ணி அனைத்து ஆசைகளையும் விட்டொழித்தவனே வைணவன் என்றும் காந்தியார் போற்றிய அப்பாடல் அறிவிக்கின்றது!

நாமம் பேக்டுவதையும் புளியோதரையும் தத்தியோன்னமும் திருக்கண்ணமுதுமாக வெட்டி ஏற்றிக் கொள்வதும் அதற்கான நிதிகளை பிச்சைக்காரர்க்குப் போகின்றனவே என்றறியும்போது அந்தத் 'தொப்பைகள் எரிவதும்' ஆக இப்படிப்பட்ட இலக்கணமே ஆத்திக இலக்கணம் என்றிருப்போர்க்கு ஏழையின் மகிழ்விலே இறைவனைக் காண முடியாதுதான்!

நம்முடைய காலத்திலே வாழ்ந்திருந்த விடுதலைக் கவி பாரதியார்—பராசக்தி உபாசகர்! அவர் நாத்திகரல்லர்! அவர் பாடவில்லையா?

"இன்னருங் கனிச்
சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண்
சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம்
ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம்
நாட்டல்
பின்னருள்ள தருமங்கள்
யாவும்
பெயர் விளங்கி
ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும்
புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்"

ஆலயங்கள் பதினாயிரம் நாட்டு தலை விட ஓர் ஏழைக்கு எழுத்தறி

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற
பரங்கிப்பேட்டை
வைத்தியம்
சென்னையில்
நேரில் சிகிச்சை பெறலாம்.
ஆலோசனைக்கு:
ஹக்கிம்
M. M. முஸ்தபா, R.M.P.
சித்த ஆயுர்வேத யூனானி முறை
ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில்
அதிக அனுபவம் உள்ளவர்.

சகலவித சர்ம நோய், ஸ்கலிதம்,
ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி,
பெண்களின் மாதவலி,
வெள்ளை படுதல், நீரழிவு வாதம்,
ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும்
பல நோய்களுக்கு கைதேர்ந்த
சிகிச்சை பெறலாம்.
நோய் விபரம் எழுதி V.P.P. மூலம்
மருந்து பெறலாம்.
முகம்மதியா
வைத்தியசாலை
[டிரஸ்ட்]
130, பிராட்வே, சென்னை-1.
போன்: 23643
H.O. பரங்கிப்பேட்டை,
தென் ஆற்காடு ஜில்லா.

வித்தல் கோடி மடங்கு புண்ணியம் என்கின்ருரே பாரதியார்—அவர் என்ன நாத்திகரா? பெரியார் இராமசாமியிடம் சிட்சை பெற்றவரா? ஆகமங்கள் தெரியாதவரா? வடமொழி படிக்காதவரா? ஏழைக்கு எழுத்தறிவிப்பதற்காகக்கூட அல்ல — அவர்கள் உயிர் வாழத் தேவையான உணவு —உடை — இருப்பிடம் இவை யளிப்பதற்காக ஆலய நிதியில் மிஞ்சுவதை எடுத்துச் செலவழிப்பது கோடி மடங்கு புண்ணியம் என்பது பாரதியார் கணக்கு!

ஆனல் அவரைப் பெற்றெடுத்த அதே பார்ப்பன இனத்தின் கணக்கு வேருக இருக்கிறதே! விந்தையல்லவா? ஆலய நிதியை ஏழை எளியவர்க்காகச் செலவிட்டால் அதனை நாத்திகப் போக்கு என்கின்றனரே, நா கூசாமல்! இறைவன் பொருளை அவனது 'அளவற்ற கருணையால்' தோற்றுவிக்கப்பட்ட எளிய மக்களுக்குச் செலவிடுவதை இறைவன் மகிழ்ச்சியோடல்லவா ஏற்றிடுவான்! அனைத்துயிரிலும் அவன்தானே இருக்கின்ருன்! எவ்வுயிரையும் தன்னுயிர்போல் எண்ணுகின்றவன் சேவையைத்தானே இறைவன் ஏற்பதாகப் பனுவல்கள் பேசுகின்றன.

'எத்துணையும் பேதமுறு
எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்
கின்ருர்
யாவர் அவருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான்
நடம்புரியும்
இடம்என நான் தேர்ந்தேன்'

என்று இராமலிங்க அடிகள் இறைவனின் இருப்பிடத்தைக் குறித்துக் காட்டினரே! இவைகளையெல்லாம் மறந்துவிட்டு — மறைத்து விட்டு, "ஏழையாவது — அவன் மகிழ்ச்சியாவது—அதிலே இறைவன் இருப்பதாவது அதற்காகஆலய நிதிகளை அரசு செலவிடுவதாவது? ஆலய நிதி என்ருல் ஆலய நிதிதான்—அதை அந்த ஆலயம் போனல் அடுத்த ஆலயத்துக்கு — அந்த ஆலயத்தில் புளியோதரை போதுமென்ருல் — அடுத்த ஆலயத்தில் புளியோதரை—அந்த ஆலய கும்பாபிஷேகம் முடிந்தால் அடுத்த ஆலய கும்பாபிஷேகம். இப்படிச் செலவிட வேண்டுமே தவிர வேறெப்படியும்செலவிடக்கூடாது என்று குதிக்கும் கூட்டம் விரைவில் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். இறைவனை வழிபடும்முறைகளிலே ஏழைக்குத் தொண்டுசெய்யும் முறையே சிறந்ததுஎன்பதை உணர்ந்து தன்னைத் தானே மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஏழைகட்கு-பிச்சைக்காரர்களுக்கு உதவிடப்போகும் இறைபணியைத் தடைசெய்ய முயன்ற குற்றத்தால் நாத்திகக் கும்பலாக மாறிவிடுகின்றது அந்தக் கூட்டம் என்பதை யாவது உணர்ந்திடவேண்டும்! அதைத் தவிர விளையப்போவது ஏதுமில்லை. ஏனென்ருல் ஆலய நிதியிலிருந்து வேறுபல நற்பணிகளுக்கும்-கல்வி, பிச்சைக்காரர்க்கு மறு வாழ்வு, தொழு நோய் தீர்க்க உதவி போன்ற நற்பணிகளுக்கும் பயன்படுத்தலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு பணிகள் வேக வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இறைவனே விரும்பும் ஏழையர் நல்வாழ்வை—எளியவர் குழந்தைகள் பெறும் கல்வியை—நோயாளிக்குப் போகும் மருத்துவத்தைத் தடுத்து இறைவனின் எரிச்சலுக்கு ஆளாக வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சினம் கொண்டுள்ள பூசுரக் கூட்டத்தை எச்சரிக்கிருேம்.

ஆலய நிதியை அறச் செயல்களுக்கல்லாமல் வேறுபிற செயல்களுக்கு — மறச் செயல்களுக்குச் செலவிடும்போது அங்கலாய்த்துக் கொண்டால் பொருள் உண்டு. பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு பாபகரமானது — என்று சொல்லுங்கள்! அல்லது கல்வி நிலையங்களுக்கு உதவுவது புண்ணியமல்ல தீது-என்று சொல்லுங்கள்! தொழு நோயாளிகளுக்கு உதவுவது ஆகமங்களின் விதிப்படிஆகாது—தெய்வத்துக்கு அடுக்காது — என்று சொல்லுங்கள்! அப்படிச் சொன்னல், பிறகு தெரியும் விளைவு! அதைச் சொல்லாமல் 'ஆலயநிதி' —துஷ்பிரயோகம்!' என்று மொட்டையாகச் சொன்னல், பொருள் என்ன?" "ஆலய நிதியால் ஒரு குறிப்பிட்ட கூட்டம் இதுவரை பிழைத்து வந்தது. இப்போது அந்த பிழைப்புக்கு — இறைவன் பெயரால் தாங்கள் மட்டுமே வயிறு வளர்த்து வந்த பித்தலாட்டத்துக்கு—ஒரு முடிவு வந்துவிட்டது! எனவே எரிச்சல்—ஏதேதோ கூவுகின்றனர்!" — என்றுதானே மக்கள் நினைப்பர்? 'ஆலய நிதியைப் பாதுகாப்போம்' — என்று முழங்குகிற அந்தணக் கூட்டத்தைக் கேட்கிருேம்:

'மக்களால் பெருவாரியான வாக்குகள் அளிக்கப்பட்டு உண்டான ஓர் அரசிடமிருந்து ஆலயநிதியைக் காப்போம் என்ருல் என்ன பொருள்?' இதுவரை ஆண்டு அனுபவித்து வந்த அந்தணர்களாகிய நம்மிடமிருந்து ஆலயநிதி பறிபோகிறது. அதைப் பாதுகாப்போம் என்றுதானே பொருள்? அப்படி நீங்கள் ஆலய நிதியைப் பாதுகாக்கப் புறப்படும்போது உங்களுடைய பாதுகாப்புக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? எண்ணிப் பார்த்தீர்களா? அந்த இறைவனேகூட உங்கள் பாதுகாப்புக்கு வரமாட்டானே! இறைவனை நீங்கள் விரும்பினலும் இறைவன் உங்களை விரும்புவதுபோல இதுவரை நீங்கள் நடந்ததில்லையே...! வரலாறுகள் இருக்கின்றனவே...! இப்போதும் ஏழையர்க்கு உதவும் இறைபணிக்கு இடையூறு செய்யவே புறப்பட்டுள்ளீர்! எனவே உங்களுக்கு வரும் இடையூறுகள் இறைவனல் வரும் இடையூறுகளே தவிர வேறு யாராலும் வரும் இடையூறுகளாய் இருக்கப் போவதில்லை!

ஆலய நிதிகள் அந்தணர்களுக்காக இருக்கின்றனஎன்றஉள்ளமுந்தியகெட்டஎண்ணத்தினல் எழுந்த கூச்சல்களே 'தேவாலயங்களைப் காப்போம்,' 'ஆலய நிதியைக் காப்போம்' என்பன போன்ற மொழிகள். தங்களுக்கென்றே எல்லாம் இருக்கின்றன. என்று எண்ணுபவன், கீதையில் காணப்படும் கண்ணன் மொழிப்படி பாவியே ஆவான். கீதையில் கர்மயோகம், பதிமூன்ரும் சுலோகத்தில்,

"வேள்வி செய்து மிஞ்சியதை உண்ணுகின்றவர்கள் எல்லாப் பாவங்களின்றும் விடுபடுகின்றனர்; ஆனல் யாரெல்லாம் தமக்கெனவே சமைக்கின்ருர்களோ அந்தப் பாவிகள் பாவத்தையே உண்கின்ருர்கள்"

—என்று விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.


ஆலயநிதி ஏழை எளியவர்க்குப் போகலாகாது — நோயாளிக்குப் போகக் கூடாது—ஆலயத்தைச் சுற்றியுள்ள அக்கிரகாரங்களுக்கே போகவேண்டும் என்பதைச் சுற்றி வளைத்துச் சொல்லும் அந்தணர்களே—கீதை உங்களைப் பாபத்தை உண்போர் என்கிறது, பதில் சொல்லுங்கள்! இன்றேல் ஆலய நிதிப் பாதுகாப்பு என்பது ஆரிய குலப் பாதுகாப்புத்தான் என்பதையாவது வெளிப்படையாகச் சொல்லி ஏற்றுக்கொள்ளுங்கள்! *

# ஆவலைத் தூண்டும் அளவற்ற பரிசுகள் உங்களுக்காகவே!

பரிசுத் தொகை

ரூ. 20,00,000

மொத்தப் பரிசுகள் 5331



இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.

**குலுக்கல் நாள்: 30-11-1971**

முதல் சிறப்புப் பரிசு

**ரூ. 2,50,000**

(பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்)

வழக்கமான பரிசுகள் (ஒவ்வொரு வரிசைக்கும்)

**ஒரு இரண்டாவது பரிசு ரூ. 1,00,000**

| | | |
|---|---|---|
| 5 மூன்றாவது பரிசுகள் | | |
| | ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம் | ரூ. 50,000 |
| 10 நான்காவது பரிசுகள் | | |
| | ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம் | ரூ. 50,000 |
| 50 ஐந்தாவது பரிசுகள் | | |
| | ஒவ்வொன்றும் ரூ. ஆயிரம் | ரூ. 50,000 |
| 1000 ஆறாவது பரிசுகள் | | |
| | ஒவ்வொன்றும் ரூ. நூறு | ரூ. 1,00,000 |
| | | ரூ. 3,50,000 |




இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 258
வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2
*5 வரிசைகள் வெளியீட்டுக்குரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். அ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, ...